பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 கார்த்திகை 08 புதன்கிழமை (23.11.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 362

# முல்லைத்தீவு மாவட்டத்தில் மழையினால் பதினேழாயிரம் குடும்பங்கள் இடப்பெயர்வு

புதுக்குடியிருப்பு,நவ.23

கடந்த மூன்று நாள்களாக பெய்துவரும் மழையினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் 17 ஆயிரத்து 352 குடும்பங்கள் இடம் பெயர்ந்திருக்கின்றன.

ஆறுமுகத்தான்குளம், வசந்தபுரம், சுதந்திரபுரம், தேவிபுரம், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் உட்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்பட்ட வெள்ளத்தினால் நூற்றுக்கணக்கான வீடுகள் இடிந்துள்ளன. கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்துக்களும் மழையினால் நாசமடைந்துள்ளன என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இடம்பெயர்ந்த மக்கள் பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் தங்க வைக்கப்பட்டிருக்கின்றனர்.

ஒட்டுசுட்டான் பிரிவில் 3 ஆயிரத்து 237 குடும்பங்களும் புதுக்குடியிருப்பு பிரிவில் 6 ஆயிரத்து 177 குடும்பங்களும் மாந்தை கிழக்கில் 2 ஆயிரத்து 8 குடும்பங்களும், துணுக்காய் பிரிவில் 3 ஆயிரத்து 748 குடும்பங்களும் கரைதுறைப்பற்று பிரிவில் 3 ஆயிரத்து 231 குடும்பங்களும் இடம் பெயர்ந்திருக்கின்றன.

இடம்பெயர்ந்த மக்களுக்கு வீடு கட்டுவதற்கென உதவி நிறுவனங்களினால் வழங்கப்பட்ட சீமெந்து, மணல் போன்ற பொருள்களும் மழைவெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டிருக்கின்றன.

நேற்றுமுன்தினம் நண்பகலுக்குப் பிறகு புதுக்குடியிருப்பிலிருந்து வேறுபகுதிகளுக்கான பஸ்போக்குவரத்துகள் யாவும் நிறுத்தப்பட்டன. நேற்று புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு பஸ்சேவை மட்டும் இடம் பெற்றது.

சில இடங்களில் பிரதான வீதிகளை மேவி வெள்ளம் பாய்வதால் அங்கு வீதிகளில் படகுச்சேவை நடத்தப்படுகிறது. கடற்புலிப் போராளிகள் மக்களுக்கான படகுச்சேவையை ஒழுங்குபடுத்திச் செய்துவருகின்றனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

★ அநுரா, அமுனுகமவிடமிருந்து முக்கிய பொறுப்புகள் பறிப்பு

# 25 பேர் அமைச்சரவை இன்று பதவியேற்பு

## அமைச்சரவை அந்தஸ்து இல்லாத பத்து அமைச்சர்களும் நியமனம்

கொழும்பு நவம்பர். 23

**நீண்ட சர்ச்சை, இழுபறி நிலைமைகளுக்குப் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவை இறுதி செய்யப்பட்டு இன்று அது பதவியேற்கவுள்ளது.**

**முன்னதாக 36 உறுப்பினர்களைக் கொண்டிருந்த அமைச்சரவை இன்றுமுதல் 25 உறுப்பினர்களுடன் இயங்கவுள்ளது. இவர்களைத்தவிர, மேலும் 10 பேர் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.**

**இந்த அமைச்சரவை மாற்றத்தின்படி முக்கிய அமைச்சுப் பொறுப்புகளிலிருந்து பலர் மாற்றப்பட்டுள்ளனர். பாதுகாப்பு மற்றும் நிதியமைச்சுப் பொறுப்புகளை ஜனாதிபதி தம்வசம் வைத்திருப்பார்.**

வெளிவிவகார அமைச்சராக மங்கள சமரவீர நியமிக்கப்படவுள்ளார். இந்தப் பதவியை வகித்த அநுரா பண்டாரநாயக்க சுற்றுலாத்துறை அமைச்சராக நியமிக்கப்படவுள்ளார். இதுவரை நிதியமைச்சராக இருந்த சரத் அமுனுகம அப்பதவியை இழக்கிறார். அவர் முதலீட்டுஊக்குவிப்பு அமைச்சராகவும்,

ஏ.எச்.எம்.பௌசி போக்குவரத்து அமைச்சராகவும், அநுர பிரியதர்ஷன யாப்பா ஊடகத்துறை அமைச்சராகவும், ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே வர்த்தக, வாணிபத்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சராகவும், ரோஹித்த போகொல்லாகம கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சராகவும், சுசில் பிரேம ஜயந்த கல்வியமைச்சராகவும், டக்ளஸ் தேவானந்தா சமூக சேவைகள் அமைச்சராகவும், ஜோன் செனவிரட்ன மின்சக்தி, எரி

(16ஆம் பக்கம் பார்க்க)

## காலநிலை இன்று சீராகும்

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் இலங்கையை விட்டு விலகுவதால் அனேகமாக இன்று சீரான காலநிலை உருவாகலாம் என கொழும்பு வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

யாழ். குடாநாட்டில் நேற்றுக் காலை முதல் மழை சற்றுத் தணிந்திருந்தபோதிலும் பிற்பகல் 3 மணியளவில் கனமழை பரவலாகப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கில் 6பேர் பலி!

கொழும்பு,நவ.23

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வெள்ளத்தில் சிக்கி ஆறுபேர் உயிரிழந்தனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொம்பனித்தெருவில் வீட்டுச் சுவர் இடிந்து வீழ்ந்து இருவர் உயிரிழந்தனர் என்றும் -

ஹபரண, பண்டாரகம பகுதியில் மேலும் நால்வர் உயிரிழந்தனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (3)

## எரிக் சொல்ஹெய்ம் 28ஆம் திகதி வருகிறார்?

இலங்கையின் புதிய ஜனாதிபதி தெரிவாகியுள்ள நிலையில் இலங்கைக்கான விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் எதிர்வரும் வாரத்தின் தொடக்கத்தில் வருகை தரவுள்ளார் எனப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

அவர் பெரும்பாலும் எதிர்வரும் 28 ஆம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவுத் தேடுதல்: 7 இளைஞர் கைது!

நெடுந்தீவு,நவ.23

நெடுந்தீவில் கடற்படை வீரர்கள் காணாமற்போயுள்ளனர் எனத் தெரிவித்து பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட ஏழு இளைஞர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# இரணைமடுக் குளத்தின் கதவுகள் திறப்பு! உடையும் நிலையில் அக்கராயன்குளம்!!

வட்டக்கச்சி,நவ.23

வன்னியில் தொடர்ந்து பெய்துவரும் மழையினால் வடக்கின் மிகப்பெரிய குளமான இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் அளவுக்கு மீறி உயர்ந்து கொண்டிருக்கிறது. குளத்தின் 11 வான் கதவுகளும் நேற்றுமுன்தினம் பிற்பகல் அளவில் ஒரேயடியாகத் திறந்துவிடக்கப்பட்டிருக்கின்றன.

திறந்து விடப்பட்ட நீர் பேரிரைச்சலுடன் மூர்க்கமாக சீறிப்பாய்கிறது. இதனால் வட்டக்கச்சி, பன்னங்கண்டிப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் தங்கியிருக்கின்றனர். அப்பகுதிகளிலுள்ள நெல் வயல்கள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கி அழிந்துபோயின.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலுடன் தொலைபேசி மூலம் மஹிந்த பேசினார்

கொழும்பு, நவ. 23

புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தம்மோடு தேர்தலில் போட்டியிட்ட ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

ஆட்சி நடத்தும் விவகாரத்தில் தாம் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் குறித்து ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவரிடம் பிரஸ்தாபித்தார் எனத் தெரிகிறது. ரணிலைத் தாம் சந்தித்துப் பேச விரும்புகின்றார் என்றும் ஜனாதிபதி மஹிந்த குறிப்பிட்டார் எனத் தெரிகின்றது.

''இன்னும் போகப் போக ஆட்சியின் பளுவை மேலும் உணர்ந்து கொள்வீர்கள். அது அப்படி ஒன்றும் சுலபமான விடயமாக இருக்காது.''

(16ஆம் பக்கம் பார்க்க)



இரணைமடுக் குளத்தில் நீர் சீறிப்பாயும் காட்சி
(படம்: வட்டக்கச்சி செய்தியாளர்)

## குடாநாட்டில் வெள்ளத்தினால் 6 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,நவ.23

யாழ். மாவட்டத்தில் தொடரும் மழை வெள்ளத்தால் 6 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கரவெட்டி, பருத்தித்துறை, சண்டிலிப்பாய், மருதங்கேணி, சாவகச்சேரி, வேலணை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலேயே மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் -

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு மற்றும் உலர் உணவுகளை வழங்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.(3)

# நாட்டின் பல பாகங்களிலும் கடும் மழை; வெள்ள அபாயம்!

கொழும்பு, நவ. 23

நாட்டின் பல பாகங்களிலும் தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடைமழையினால் பெரும் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

தாழ் பிரதேசங்களில் பல ஆயிரம் வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன. கொழும்புக்கு வரும் பிரதான பாதைகள் நீரில் மூழ்கி உள்ளதால் போக்குவரத்துச் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

அரச மற்றும் தனியார் அலுவலகங்களில் ஊழியர்களின் வரவும் நேற்றும் பெரிதும் குறைவாகவே காணப்பட்டது.

கடந்த இரண்டு தினங்களாகத் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழையினால் களுகங்கை, களனி கங்கை என்பனவற்றின் நீர்மட்டம் பெருமளவில் உயர்ந்துள்ளது. களனிகங்கையின் நீர்மட்டம் இன்னும் நான்கு அடி உயர்ந்தால் கொழும்பில் பாரிய அனர்த்தங்கள் ஏற்பட இடமுண்டு என வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆகக்கூடுதலான மழைவீழ்ச்சி கொழும்பிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளது. கட்டுநாயக்காவில் 197.8, கொழும்பு 176.6, இரத்மலானை 162.6 என்ற மில்லி மீற்றர் அளவில் மழை பெய்துள்ளது.

இரண்டாவதாக இரத்தினபுரி மாவட்டத்தில் பெரும்மழை பெய்துள்ளது. இதனால் களுகங்கையின் கரையோரப் பிரதேசங்கள் பெரிதும் நீரில் மூழ்கி உள்ளன.

இரத்தினபுரி - அவிசாவளை, இரத்தினபுரி - இங்கிரியா - பாணந்துறை, அவிசாவளை - கரவலில்ல மற்றும் கொழும்பு வீதிகள் நீரில் மூழ்கி உள்ளன. இதனால் போக்குவரத்துச் சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. அரச மற்றும் தனியார் அலுவலகங்களிலும் ஊழியர்களின் வரவு மிகவும் குறைவாகவே காணப்பட்டது. மாணவர்களின் வரவு குறைவாகக் காணப்பட்டதால் பல பாடசாலைகள் நேற்றுக்காலை 10 மணியுடன் மூடப்பட்டன.

தலைநகரில் நடைபாதை வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாரஹென்பிட்டிய, கிரிமண்டல மாவத்தை, தாப்ரே மாவத்தை மற்றும் ஆமர்வீதி, ஊருகொடவத்தை, மாளிகாவத்தை, மோதரை, ஏகித்த, பள்ளியாவத்தை, சேதுவத்தை ஆகிய பகுதிகள் நீரில் மூழ்கி உள்ளன.

களனி கங்கை பெருக்கெடுத்துள்ளதால் தலைநகரின் பல பாகங்களிலும் இருந்து செல்லும் வடிகால்கள் நிரம்பி தாழ்நில மற்றும் சேரிப்புற வீடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

தலைநகரைப் பொறுத்தவரையில் பெருந்தெருக்களில் நீர் நிறைந்து காணப்படுவதற்கு பொலித்தீன் பாவனையே காரணமாக அமைந்துள்ளது.

பொதுமக்களால் வீசப்படும் பொலித்தீன்கள் வடிகால்களில் பெரும் அடைப்பை ஏற்படுத்தியுள்ளன. இந்த பொலித்தீன்கள் மக்கி அழிந்து போகாத தன்மை உடையவை. எனவே பொதுமக்களும் இவ்விடயத்தில் பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும் என கொழும்பு மாநகர சபை பிரதி மேயர் அசாத் சாலி குறிப்பிட்டார்.

**திருமலையில்**

திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழையினால் கரையோரப் பிரதேசங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலையில், மடத்தடி, கேணியடி, அலஸ்தோட்டம், ஆனந்தகுடி ஆகிய இடங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

நிலாவெளி, கோபலாபுரம், ஏழாம் கட்டை, குச்சவெளி, புல்மோட்டை ஆகிய பிரதேசங்களும், கிண்ணியாவில் பைசால் நகர், கடலூர், ஆலங்கேணி, நடுஊத்து குரங்குபாஞ்சான் ஆகிய பிரதேசங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

## விமல் வீரவன்ஸவுக்கு திடீர் நெஞ்சுவலி

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரசாரச் செயலாளருமான விமல் வீரவன்ஸ, நெஞ்சுவலி காரணமாக நேற்று கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். முன்னதாக ஸ்ரீ ஜெயவர்தனபுர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட விமல் வீரவன்ஸ பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த விமல் வீரவன்ஸவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நேரில் சென்று பார்த்தார். சி[illegible]சைகளைப் பெற்ற பின்னர் நேற்றுமாலை விமல் வீடு திரும்பிவிட்டாரென வைத்தியசா[illegible]ட்டாரங்கள் தெரிவித்தன. (க)

## யாழ். செயலகத்தை முடக்கும் வகையில் மறியல் செய்ய பட்டதாரிகள் முடிவு

யாழ்ப்பாணம்,நவ.23

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அடுத்த மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் வேலை வாய்ப்பு பெற்றுத்தராவிட்டால் யாழ். செயலக செயற்பாடுகளை முற்றாக முடக்கி தொடர் போராட்டம் நடத்தப்படும்.

யாழ். கல்வி வலய முன்றிலில் நேற்று ஒன்றுகூடிய வேலையற்ற பட்டதாரிகள் இந்தத்தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

இது தொடர்பாக வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் எஸ். மோகனதாஸ் கருத்துத் தெரிவிக்கையில்:-

வேலையற்ற பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்பினை கல்வி அமைச்சு உடனடியாக வழங்கவேண்டும் என்று தெரிவிக்கும் மகஜர் இன்று யாழ். மாவட்ட அரச அதிபர், கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு கையளிக்கப்படவுள்ளன.

இது தொடர்பாக பட்டதாரிகளின் பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்களுக்கு வேலை வாய்ப்பினை உடனடியாக வழங்க ஆவன செய்யவேண்டும். இல்லையேல் அடுத்த மாதம் 3ஆம் திகதியிலிருந்து யாழ். செயலக வாயிலை மறித்து செயலக செயற்பாடுகளை முடக்கி போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (3-13)

## வடமராட்சி கிழக்கிற்கான போக்குவரத்துத் துண்டிப்பு

வடமராட்சிகிழக்கு,நவ.23

வடமராட்சி கிழக்கில் தொடரும் அடைமழையினால் போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டுள்ளன. படகுகள் மூலமும் மக்கள் அவசர பயணங்களை மேற்கொள்ளவேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளன.

கேவில், கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, ஆழியவளை ஆகிய இடங்களுக்கு செல்லும் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதினால் போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

வெற்றிலைக்கேணி, ஆழியவளை ஆகிய இடங்களிலிருந்து மருதங்கேணிவரை இயந்திரப் படகுகள்மூலம் பயணிகள் நேற்றுமுதல் பயணத்தை மேற்கொள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது.

மருதங்கேணி, உடுத்துறை, மாமுனை ஆகிய இடங்களிலிருந்தே தற்போது வாகனப் போக்குவரத்துகள் நடைபெற்றுவருகின்றன. மழை தொடருமாயின் இவ்விடங்களுக்கான போக்குவரத்துகள் துண்டிக்கப்படும் அபாயம் ஏற்படலாம்.

அதேவேளை, வடமராட்சி கிழக்கில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்கள் வசித்துவந்த இடைத்தங்கல் முகாம்கள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இப்பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள், பொதுக் கட்டடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதனால், மக்கள் தஞ்சமடைய வழியின்றி வெள்ளத்திலும் குளிரிலும் வாழவேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டு ஒரு வருடம் பூர்த்தியடைகின்ற நிலையிலும் அம்மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு உத்தரவாதம் அளித்த நிறுவனங்கள் எதுவித நடவடிக்கையினையும் எடுக்காததினால் இந்த அவலநிலை ஏற்பட்டுள்ளது.

அப்பகுதிப் பாடசாலைகளிலும் மாணவர் வரவு குறைவாகவே காணப்படுகின்றது. வயிற்றோட்டம் போன்ற தொற்றுநோய்கள் பரவக்கூடிய அபாயமும் காணப்படுகின்றது. (எ-182)

## பீடாதிபதியாக குமாரவடிவேல் மீண்டும் தெரிவு

யாழ்ப்பாணம்,நவ.23

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதியாக இ.குமாரவடிவேல் மூன்றாவது தடவையாக ஏகமனதாகத் தெரிவாகியுள்ளார்.

நேற்று நண்பகல் 12மணியளவில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தலைமையில் தெரிவு இடம்பெற்றது. இந்நிகழ்வில் விஞ்ஞானபீட சபையைச் சேர்ந்த பிரதிநிதிகள் அனைவரும் கலந்துகொண்டனர்.

கடந்த தடவையும் விஞ்ஞானப் பீடாதிபதியாக இவர் ஏகமனதாகத் தெரிவாகியிருந்தார் என யாழ். பல்கலைக்கழக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (3-12)

## யாழ். சைவபரிபாலனசபை நடத்தும் ஆறுமுகநாவலர் குருபூசைதின நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.23

யாழ். சைவபரிபாலனசபை நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 126ஆவது குருபூசைத்தினமும், பரிசளிப்பு விழாவும் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் யாழ். நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சைவபரிபாலனசபையின் தலைவர் கலாநிதி வ.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் யாழ். கல்வி வலய சைவசமயபாட ஆசிரிய ஆலோசகர் திருமதி பா.பாலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

திருமுறை ஓதல், பண்ணிசைக் கச்சேரி என்பவற்றைத் தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அருளுரை வழங்குவார். ஆசிரிய மணி அ.பஞ்சாட்சரம் வரவேற்புரை நிகழ்த்துவார். நாவலரின் குருபூசை தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சுப்போட்டிகளில் ஒவ்வொரு பிரிவுகளிலும் முதலாவது இடங்களைப் பெற்ற மாணவர்களின் பேச்சு தொடர்ந்து இடம்பெறும்.

முற்பகல் 11.15 மணியளவில் 'நாவலரும் நாமும்' என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் கலாநிதி மா.வேதநாதன் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

பிற்பகல் 12.30 மணியளவில் பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படும். (எ)






உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# அடுத்தடுத்து வரும் உரைகள்

இலங்கைத் தீவின் சிறுபான்மையினரான தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் போன்றோரின் வாக்குகளைப் பெறாமலேயே, தனியாக பௌத்த, சிங்களப் பேரினவாதிகளின் வாக்குகளில் தங்கி, தம்மை இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக்கிக் கொண்டிருக்கிறார் மஹிந்த ராஜபக்ஷ.

ஆக மொத்தத்தில் அரசிலும், ஆட்சி அதிகாரத்திலும் பௌத்த, சிங்கள மேலாதிக்கத்தின் செல்வாக்கு உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

இந்த நிலைமையில் தமக்காக ஜனாதிபதித் தேர்தலில் பிரசாரம் செய்வதற்குக்கூட முன்வராத ஒருவருக்கு தமக்கு அடுத்த நிலையை - பிரதமர் பதவியை - வழங்கியிருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

தென்னிலங்கைச் சிங்களம் தனக்குரிய பிரதமரை வரவேற்பதில் தமிழர் தேசத்துக்கு - தேசியத்துக்கு - முக்கியத்துவம் ஒன்றுமில்லை. ஆனால், பௌத்த - சிங்களக் கடும் போக்காளர் ஒருவரை அப்பதவிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்திருக்கின்றமை தமிழர் தரப்புக்கும், இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களில் அதிகம் சிரத்தை காட்டிவரும் சர்வதேச சமூகத்துக்கும் ஒரு வித்தியாசமான செய்தியைச் சொல்கின்றது என்பதால் தமிழர்களுக்கு இந்த விடயம் முக்கியமானதாக அமைகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் விடுதலைப் போராட்டத்தை இராணுவப் பலம் கொண்டே நசுக்கவேண்டும் என்று ஓங்கிக் குரல் கொடுத்தவர் பிரதமர் ரட்ண சிறி விக்கிரமநாயக்கா என்பதைத் தமிழர்கள் மறந்துவிட வில்லை.

தென்னிலங்கையில் பேரினவாத சக்திகள் ஒன்று திரண்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப்பதவியை கைப்பற்றியிருக்கும் இவ்வேளையில், கட்சியில் மிதவாதப் போக்குடைய பல மூத்த தலைவர்கள் இருக்கத்தக்கதாக, பேரினவாதப் போக்கு என்ற தகுதியை மட்டும் உடைய ஒருவரை - அதுவும் தேர்தல் சமயத்தில் தம்மோடு நிற்காத ஒருவரை - தேடிப்பிடித்துப் பிரதமராக நியமிக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயற்பாடு, இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதில் அவருக்குள்ள பற்றுறுதி குறித்துத் தமிழர்களுக்குப் பலத்த சந்தேகத்தை - ஐயுறவை - ஏற்படுத்தியிருக்கின்றது.

ஜனாதிபதிப் பதவியேற்ற கையோடு ஆளும்தரப்புக்குள் கடும் குத்துவெட்டு, குளறுபடிகளை எதிர்நோக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அந்தப்பிரச்சினைகளை வெற்றிகரமாகத் தாண்டுவதற்கான ஒரு தந்திரோபாயமாக இந்த மூத்த தலைவரை (ரட்ணசிறி விக்கிரமநாயக்காவை) தேடிப்பிடித்து அவரிடம் பிரதமர் பதவியை ஒப்படைத்தாரா அல்லது தமிழரின் விடுதலைப் போராட்ட விவகாரத்தைத்தீவிர - கடும் - போக்குடைய சிங்களத் தலைவர் ஒருவர் மூலம் கையாள வைத்து தமிழர்களுக்கு எதிராக அடக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொள்ளச்செய்யும் நோக்குடன் இக்காய்நகர்த்தலை மேற்கொண்டாரா என்பது தெளிவாகவில்லை. போகப் போக அதன் உள்ளார்த்தம் - சூக்குமம் - வெளிப்படவும், புரியவும் தொடங்கும் என எதிர்பார்க்கலாம்.

'ஆயுதங்களைப் புலிகள் கீழே வைத்தால்தான் அவர்களுடன் சமரசப் பேச்சு' - என்ற நிபந்தனைப் பாணியில் முன்னர் பேசி வந்தவர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா. அப்படிப்பட்டவரே அரசின் இரண்டாம் நிலையில் உள்ள உயர் தலைவராகக் கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருக்கின்றார்.

புதிய ஜனாதிபதி, இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் முயற்சியை எவ்வாறு கையாளப்போகின்றார்? இனி அடுத்த நகர்வு போரா? சமாதானமா? - என்றெல்லாம் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ள சமயத்தில் இந்தப் பிரதமர் நியமனம் வித்தியாசமான ஒரு செய்தியைத் தருவதாகவே தமிழர் தரப்புக் கொள்ளும்.

புதிய ஜனாதிபதி பதவியேற்று நான்கு நாள்களாகின்றன. நாட்டின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த, பிரதான பிரச்சினையான இனப்பிணக்குக்குத் தீர்வு காண்பதற்கான தமது நகர்வு எப்படி அமையப்போகின்றது என்பதை அவர் இன்னும் கோடி காட்டவில்லை.

ஜனாதிபதியால் இடைநிறுத்தப்பட்ட நாடாளுமன்ற அமர்வு நாளை மறுதினம் மீண்டும் கூடும்போது, அந்த அமர்வை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்து புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு உரையாற்றவிருக்கின்றார். அப்போது மேற்படி இனப்பிரச்சினை விவகாரத்தைக் கையாளும் விடயத்தில் தமது உத்தேச நிலைப்பாட்டை - போக்கை - அவர் வெளிப்படுத்தக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன் பின்னர் இரண்டு நாள்கள் கழித்து விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தமது வருடாந்த மாவீரர் தின உரையை ஆற்ற இருக்கின்றார். தென்னிலங்கையில் பேரினவாதம் அதிகார, ஆட்சி உச்சத்துக்கு வந்துள்ள நிலையில் அந்த உரைவருவதால், வழமைபோல இலங்கை மட்டுமல்லாமல் சர்வதேச சமூகமுமே அதன் விவரங்களை வரிக்குவரி - வார்த்தைக்கு வார்த்தை - அறிவதற்கும் அதற்கு அப்பால் வரிகளுக்கு இடையில் இன்னதெனக் குறிப்பிடாமல் கோடி காட்டப்பட்டிருக்கும் அம்சங்களைப் புரிந்து கொள்ள முயல்வதற்குப் பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றன.

அவை வெளியாகும்போது இலங்கைத் தீவின் எதிர்காலப் போக்கு எப்படி அமையும் என்பதை ஓரளவு ஊகிக்கக் கூடியதாக இருக்கும்.

# தென்மராட்சியில் தாழ்ந்த பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கின; மக்கள் இடம்பெயர்வு

தென்மராட்சி,நவ.23

கடந்த மூன்று தினங்களாக பெய்த கடும் மழையினால் தென்மராட்சி கிழக்குப் பகுதியின் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியதால் அப்பகுதி மக்கள் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மிருசுவில், தவசிக்குளம் பகுதியில் 47 வீடுகளும் பாலாவிப் பிரிவில் 15 வீடுகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் -

தவசிக்குளம் பிரிவில் மூன்று வீடுகள் வீழ்ந்துள்ளதாகவும் அப்பகுதி கிராம அலுவலர்கள் தெரிவித்தனர்.

இடம்பெயர்ந்த மக்கள் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

தொடர்ந்து பெய்துவரும் பெரு மழையால் தென்மராட்சிப் பகுதியில் உள்ள வயல்வெளிகள், அந்த வயல் வெளிகளில் உள்ள குளங்கள் அனைத்தும் நீரினால் நிறைந்து காணப்படுகிறது.

நெல் வயல்களில்நெற்பயிர்கள் நீரில் மூழ்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து பெய்யும் மழையாலும் வீசும் குளிர்காற்றினாலும் நேற்று பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைந்து காணப்பட்டது.

தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளது.இதனால் சில வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அதேவேளை-

தென்மராட்சிப் பிரதேசத்தில் பெய்த பெருமழையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் விவரங்கள் பிரதேச செயலகத்தினால் திரட்டப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்ட மக்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் பதிவு செய்யுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் கேட்டுள்ளார். (3-31-117)

## சாவகச்சேரியில் இரு ஆலயங்களில் திருட்டு

தென்மராட்சி,நவ.23

தொடர்ச்சியாக மழைபெய்த வேளையில் பெருங்குளம் பகுதியில் இரண்டு ஆலயங்கள் திருடர்களின் கைவரிசைக்கு இலக்காகின.

நேற்றுமுன்தினம் இரவு பெருங்குளம் பிள்ளையார் கோயில், கற்குழி முத்துமாரி அம்பாள் ஆலயம் ஆகியவற்றில் இத்திருட்டு இடம்பெற்றுள்ளது.

ஆலயக் கதவுகள் உடைக்கப்பட்டு தங்க நகைகள், பெறுமதிமிக்க பொருள்கள் திருடப்பட்டுள்ளதாகவும்-

ஆலய விக்கிரகங்கள் அகற்றப்பட்டு அதன் கீழிருந்த தங்கத் தகடுகளும் எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(3-117)

## ராஜபக்ஷவின் இடத்துக்கு நிருபமா நியமனம்

கொழும்பு,நவ.23

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளதை அடுத்து வெற்றிடமாகியுள்ள அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு முன்னாள் பிரதியமைச்சரான திருமதி நிருபமா ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த 2004 ஆம்ஆண்டில் இடம் பெற்ற பொதுத்தேர்தலில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில்போட்டியிட்ட வேட்பாளர்கள் மத்தியில் விருப்பு வாக்குப் பட்டியலில் ராஜபக்ஷவுக்கு அடுத்தஇடம் நிருபமா ராஜபக்ஷவுக்கே கிடைத்துள்ளது.மேலும் இவர் 1994 முதல் 2000 ஆம் ஆண்டு வரை ஆட்சியிலிருந்த பொ.ஐ.முன்னணி அரசில் உல்லாசப் பயண மற்றும் சிவில் விமானச் சேவை பிரதியமைச் சராகப் பதவி வகித்துள்ளார்.

(3-206)

## திக்கத்தில் 35 வீடுகள் கையளிக்கும் நிகழ்வு

கரவெட்டி,நவ.23

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிரந்தர வீடமைப்புத் திட்டத்தில் இரண்டாம் கட்ட வீடுகள் கையளிக்கும் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திக்கம் மெதடிஸ்த நகரில் 35 நிரந்தர வீடுகள் கையளிக்கப்படவுள்ளன.

வல்வெட்டித்துறை நகர சுத்தி கரிப்புத் தொழிலாளர்களுக்கு இந்த வீடுகள் கையளிக்கப்பட்டவுள்ளன. ஜேர்மன் நாட்டு அரச சார்பற்ற நிறுவனமான டைக்கொனி நிறுவனம் இலங்கை மெதடிஸ்த திருச்சபை ஆகியவற்றின் அனுசரணையுடன் இந்த வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேசும் கௌரவ விருந்தினர்களாக அருட்திரு.எஸ். ஜே.கதிரவேற்பிள்ளை, எஸ்.டானியல் தம்பிராசா பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் அருட்திரு. டி.அழகராசா ஆகியோரும் கலந்துகொள்வர்.

(3-70-202)



படகு இயந்திரம் பழுதானதால் நடுக்கடலில் தவித்து வடமராட்சிக் கடற்றொழிலாளர்களால் காப்பாற்றப்பட்ட தமிழக மீனவர்கள் முத்தையா பழனிவேல், முத்தையா முத்துச்சாமி, குடும்பன் தொட்டாயிரம் ஆகியோர் தமது படகுடன் படத்தில் காணப்படுகின்றனர்.

*(படம்: சுந்தரலிங்கம்)*

## குவைத் நட்டஈட்டுக் கொடுப்பனவு

வலி.மேற்கு,நவ.23

வளைகுடா யுத்த நட்டஈடு பெறாதவர்கள் பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

1990-91ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடைபெற்ற வளைகுடா யுத்தத்தினால் அங்கு பணியாற்றியவர்கள் உடனடியாகத் தாய்நாடு திரும்ப நேரிட்டது. இதில் பலர் தொழில் மற்றும் சொத்துகளை இழந்தனர். இவர்களுக்கு நட்டஈடு வழங்கும் நடவடிக்கையை ஐ.நா. நட்டஈட்டு ஆணைக்குழு மேற்கொள்கின்றது.

பாதிப்படைந்த இலங்கையர்களில் ஐ.நா. நட்டஈட்டு ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டு அவர்களில் ஒரு தொகுதியினருக்கு நட்டஈடு வழங்கப்பட்டது.

ஐ.நா. ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டு இதுவரை நட்டஈடு வழங்கப்படாதவர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. இதற்கான பட்டியல் இலங்கை வேலை வாய்ப்புப் பணியகத்தால் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதன்படி வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் வளைகுடா நட்ட ஈடு பெற அங்கீகாரம் பெற்றும் கொடுப்பனவு கிடைக்கப்பெறாதவர்கள் அல்லது பகுதிக்கொடுப்பனவு பெற்றவர்கள் பிரதேச செயலகத் திட்டமிடல் பிரிவின் மனிதவள அபிவிருத்தி உதவியாளருடன் தொடர்புகொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ஒ)

## எயிட்ஸ் விழிப்புணர்வு தினத்தையொட்டி கொடிவாரம் அனுஷ்டிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ.23

சர்வதேச எயிட்ஸ் விழிப்புணர்வுத் தினத்தை முன்னிட்டு எதிர்வரும்டிசெம்பர் முதலாம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரையான காலம் கொடிவாரமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. யாழ்.சுகாதார சேவைகள் பணிமனை பிரதி மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர். கேதீஸ்வரன் இதைத் தெரிவித்தார்.

இந்தக் கொடிவாரத்தின் மூலம் சேகரிக்கப்படும் நிதி எயிட்ஸ் நோயாளர்கள் நலவாழ்வுக்கான நம்பிக்கை நிதியத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்படுமெனவும்-

எனவே இந்த நற்பணிக்கு அனைவரையும் முன்வந்து உதவுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ஒ-203)

### நாளை

கார்த்திகை 09
வியாழக்கிழமை
24.11.2005
திதி: அட்டமி
பிற்பகல் 04.20 வரை
நட்சத்திரம்: மகம்
பிற்பகல் 02.53 வரை
சுபநேரம்: 07.41 - 09.11
ராகுகாலம்: 01.41 - 03.11
(யாவும் பழைய நேரப்படி)

## மழையால் மரக்கறிச் செய்கை பாதிப்பு

அச்சுவேலி,நவ.23

தொடர்ச்சியான மழை மற்றும் ஈரலிப்பான காலநிலையால் மரக்கறிப் பயிர்கள் அழுகி சேதமடைந்துள்ளது என்றும் - இதனால் தாம் நஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர் என்றும் - குடாநாட்டு விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

குடாநாட்டில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையால் பயிர்ச்செய்கை நிலங்களில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.இதனால் கோவா, கரட், மரவள்ளி, கத்தரி, மிளகாய் போன்ற பயிர்கள் அழுகி சேதமடைந்துள்ளன.

மரக்கறிவகை கூடிய விலைக்கு விற்பனை செய்யப்படும் இந்தக் காலப் பகுதியில் அருமையாக உள்ளபயிர் இனங்கள் மழைவெள்ளத்தினால் அழுகி சேதமடைந்திருப்பது விவசாயிகளை கவலை கொள்ளவைத்துள்ளது.

இந்த நிலைமையால் மரக்கறிகளின் விலை மேலும் அதிகரித்திருப்பதோடு சிலவகை மரக்கறிகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

(ஒ-11)

### உதயவாக்கு

உங்கள் சுயதேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பிறரை எதிர்பார்த்திருக்க வேண்டாம்.

- பாபா.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. புறொயிலர் சுத்தம் செய்யப்பட்டது. 1Kg 240/- வியாபாரிகளிற்கு கழிவு வழங்கப்படும். தொடர்பு: றாஜீவ் ஆனைக்கோட்டைச் சந்தி, விஜய் குமார் குளப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை T.P.No.: 222 2867, 222 3529. (43044)

### விற்பனைக்கு

**GL-XXXX** இலக்கமுடைய ஓட்டோ, **201-XXXX** ஓட்டோ, மினிகப்வடி கன்ரர் **(H.m-XXXX), 14-XXXX MAZDA** கார், **18-XXXX** ரொயாட்டா கொரில்லா கார், **17-XXXX** தொடரிலக்கமுடைய **Renault** கார் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: ராஜ், இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி. (43004)

லயிற்றோஸ் 150 என்ற வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: கஜேந்திரன், உடுவில் தெற்கு, பாலவோடை, மானிப்பாய். (43400)

புறொயிலர் 1Kg 160, சுத்தம் செய்தது 1Kg 250, கல்பேட் கோழியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: தாசன் கோழிப்பண்ணை 158/4,கோயில் வீதி, யாழ்ப்பாணம். (43014)

### வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, பிறவுண் வீதியில் 3 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: .S.ஸ்ரீஸ்கந்தராசா, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு (கல்வாரி சேச்சிற்கு அருகில்) தரகர் தேவையில்லை. (42992)

### சேவை

55000 அமெரிக்க விசா விண்ணப்ப முடிவு திகதி 04-12-2005 தாமதிக்காமல் விண்ணப்பிக்க. முழுப்பெயர், விலாசம், பிறந்த திகதி, பாஸ்போட் அளவு போட்டோவுடன் ரூபா 400/- இற்கான மணியோடரை அனுப்புங்கள். குடும்பமாயின் மனைவி, பிள்ளைகளின் தனிப்போட்டோக்கள், பெயர், பிறந்த திகதிகளையும் அனுப்பவும். Penquin Book Shop, $B_2/F_{23}$ Blomendhas Flats, Kotahena. 0773081764 (சி/46306)

### 'வீடற்றவன்' நாவல்

சி.வி.வேலுப்பிள்ளையின் 'வீடற்றவன்' நாவலின் கதைச் சுருக்கம், விளக்கம், விமர்சனம் எல்லா வகை இலக்கியங்களும் படைத்த கலாபூசணம் அராலியூர் ந.சுந்தரம் பிள்ளை எழுதியது. இரண்டாம் பதிப்பு ரூபா75/- (43041)

### பூச்சாடிப் பிரியர்களுக்கு

றபர் துகள்களால் தயாரிக்கப்பட்ட சிறிய, பெரிய கலர்ப் பூச்சாடிகள் விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் இலகுவில் இடம்மாற்றி வைக்கக்கூடியது. தொடர்பு: நெட்டிலிப்பாய், கோண்டாவில் **(DSI)** ரயர் களஞ்சியத்திற்கு அருகில். (சி/46278)

### தொடர்பு கொள்ளவும்

யமுனாபாரி ஆடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும் தொடர்பு. அ.இராசலிங்கம், 34/13, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். (43051)

## சாரணர் போட்டி முடிவுகள்

வடமராட்சி, நவ.23

பருத்தித்துறை சாரண மாவட்டத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி முதலாம் இடத்தையும், வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி இரண்டாம் இடத்தையும், பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு அருகில் உள்ள மைதானத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் சாரணர் தேசிய தலைமையகப் பயிற்றுநர் சங்க உறுப்பினரும் முன்னாள் ஆணையாளருமான கோ.செல்வவிநாயகம் பிரதம விருந்தினராகவும் வல்லிபுர ஆழ்வார் ஆலய தர்மகர்த்தா சபைச் செயலாளர் வி.கருணாமூர்த்தி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.(ஒ-173-203)


சுவாமி ஸ்ரீ சத்திய சாயிபாபா அவர்களது 80வது பிறந்த தினமாகிய

இன்று யாழ் நகரில் மலர்கிறது

மகத்தானதொரு மருத்துவ சேவை!



## பிரின்ஸெஸ் ஒ(f)ப் வேல்ஸ் வைத்தியசாலை

"கோகுலம்",
132, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம், இலங்கை.

பேராசிரியர் கலாநிதி சு. மோகனதாஸ் ( துணை வேந்தர் யாழ் பல்கலைக்கழகம் )
அவர்களினால்

இன்று (23-11-2005) பகல் 12.00 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும்

☞ கண், காது-மூக்கு-தொண்டை, பல், தோல், பொது, இருதய, நிரழிவு, குழந்தை, பெண்ணியல் முதலான வைத்திய ஆலோசனையுடன் நோய் மூலத்தைக் கண்டறியும் இருதய இயக்கம் பற்றி நிபுணத்துவம் ஆராய்வு, கதிர் சிகிச்சை ஆய்வு, 24 மணிநேர மருந்தகம் உள்ளிட்ட அதி சிறந்த நவீன வைத்திய சேவைகளும் எம்மால் வழங்கப்படும்.

சாயி பஜனை மாலை 4.00-5.00 மணிவரை



## THE PRINCESS OF WALES
## —— MEDICAL CENTRE ——

"KOKULAM"
132, KACHCHERI NALLUR ROAD,
JAFFNA, SRI LANKA.
TEL : 021 222 6179
FAX : 021 222 6180

TNT Grafix

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"



### சிறுவர் இல்லத்திற்கு வேலையாள் தேவை

சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்து
பெண் பிள்ளைகளை பராமரிக்கக்கூடிய
பெண் பராமரிப்பாளர் ஒருவர் தேவை.

வயதெல்லை: 35 இற்கு மேல்
விண்ணப்பங்கள், சுயவிவரக்கோவையுடன்
27-11-2005 இற்கு முன் உறவினரல்லாத
இருவரின் சிபார்சுடன் நேரில் சமர்ப்பிக்கவும்.

நிர்வாகி
ஏலிம் சிறுவர் இல்லம்,
மெமோறியல் ஒழுங்கை,
மானிப்பாய்.

(43045)(26-34-16)


## மரண அறிவித்தல்

### நாகராசா பாக்கியலக்சுமி



இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகராசா பாக்கியலக்சுமி 19.11.2005 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நாகராசாவின் அன்பு மனைவியும் சுப்பையா, காலஞ்சென்ற சின்னம்மா ஆகியோரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் விக்கினேஸ்வரன் (சுவிஸ்), அபிராமி ஆகியோரின் அன்புத் தாயாரும் காஞ்சனா, சுரேஸ்குமார் (ஊழியர்- நட்டாங்கண்டல் வைத்தியசாலை) ஆகியோரின் மாமியாரும் கனகம்மா (கனடா), பரமசிவம் ஆகியோரின் சகோதரியும் கோபிஷன், ராகுல் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-11-2005) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கே.கே.எஸ். றோட்,*
*இணுவில் சந்தி,*
*இணுவில்.*

*தகவல்:*
*வே.நாகராசா*
*(கணவர்).*

(43043)(18-11-19-42)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



நேற்றைய உதயனின் 6 ஆம் பக்கத்தில் வெளியான
*அமரர் கார்த்திகேசு இராஜகோபால்*
(இளைப்பாறிய அதிபர் R.C. பாடசாலை, உரும்பிராய்)
அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி விளம்பரத்தில் அருகில் உள்ள புகைப்படமே பிரசுரிக்கப்பட்டிருக்கவேண்டும். தவறுதலாக வேறொருவருடைய புகைப்படம் பிரசுரிக்கப்பட்டுவிட்டது. இதனால் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு வருந்துகிறோம்.

# வன்னி எங்கும் வெள்ளம்!

## அடை மழையால் மக்கள் இடம் பெயர்வு: குளங்கள் பெருக்கு; வீதிகளில் படகுச்சேவை!

வன்னியிலிருந்து உதயன் செய்தியாளர்கள்

**கடந்த சில நாள்களாக வன்னிப்பெரு நிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் பெய்த அடைமழையினால் அங்குள்ள மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக முடங்கியிருக்கிறது. பெரும்பாலான குளங்களில் நீர் நிரம்பி வழிந்தோடுகிறது. சிலகுளங்கள் உடைப்பெடுத்துப் பாய்கின்றன. பார்க்கும் இடமெல்லாம் மழை வெள்ளம் வாரடித்துப் பாய்கிறது.**

**ஆயிரக்கணக்கான மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.**

**பிரதான வீதிகள் மற்றும் ஏனைய வீதிகள் ஊடான போக்குவரத்துகள் தடைப்பட்டிருக்கின்றன; வீதிகள் துண்டாடப்பட்டிருப்பதால் சில இடங்களில் ஒரு கரையில் இருந்து வீதியின் மறுகரைக்குச் செல்லுவதற்குப் படகுச் சேவைகள் நடத்தப்படுகின்றன.**

நேற்றுமுன்தினம் தமது இருப்பிடங்களிலிருது கடமைக்காக கிளிநொச்சி போன்ற பகுதிகளுக்கு வந்த அரச அலுவலர்கள் மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் போன்றோர் நேற்றுமுன்தினம் மாலை மீண்டும் தத்தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிச்செல்ல முடியாமல் அல்லோலகல்லோலப்பட்டனர். நேற்றுமுன்தினம் இரவுவரை வீடுதிரும்ப முடியாத பலர் கிளிநொச்சியிலுள்ள தமது உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் தங்கியிருந்தனர். நேற்றும் இடையிடையே மழை பெய்து கொண்டிருந்தது. வழமை நிலை திரும்புவதற்கு இன்னும் சில நாள்கள் - வாரங்கள் எடுக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

**இடம்பெயர்வு**

பல பகுதிகளில் வீடுகளுக்குள் மழை வெள்ளம் புகுந்தது. இதனால், மக்கள் தமது பெட்டி, படுக்கைகளுடன் வீடுகளைவிட்டு வெளியேறி கோயில்கள், பாடசாலைகள், பொதுநோக்கு மண்டபங்களில் தஞ்சம்புகுந்தனர்.

ஒட்டுசுட்டானில் இதன்காரணமாக மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்துள்ளனர். விவசாயச் செய்கைகளும் பெருமளவில் பாதிப்படைந்துள்ளன.

சிற்றாறுகள் பெருக்கெடுத்து ஓடுகின்றன. பேராறு, பண்டாரவன்னி, காஞ்சுரமோட்டை, கற்சிலைமடு, சமளங்குளம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து கற்சிலைமடு அரசினர் தமிழ்கலவன் பாடசாலையிலும் ஒட்டுசுட்டான் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையிலும் தங்கியுள்ளனர்.

கற்சிலைமடு அ.த.க. பாடசாலையில் 57 குடும்பங்களும் ஒட்டுசுட்டான் இ.த.க.பாடசாலையில் 58 குடும்பங்களும் தங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இடம்பெயர்ந்த மக்களுக்கான சமைத்த உணவுகளை முல்லை. அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் வழங்கிவருகின்றது. கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 500 குடும்பங்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. 500 குடும்பங்கள் அங்கு இடம்பெயர்ந்து பொது இடங்களில் வசித்து வருகின்றனர்.

இடம்பெயர்ந்த மக்கள் காஞ்சிபுரம் பொதுநோக்குமண்டபம், பரந்தன் புனித அந்தோனியார் தேவாலயம், நாகேந்திரபுரம் புனித அந்தோனியார் தேவாலயம், தர்மபுரம் அ.த.க., குமாரசாமிபுரம் பொதுநோக்குமண்டபம், மயில்வாகனபுரம் பாடசாலை, பிரமந்தனாறு ம.வி., புனித இராயப்பர் தேவாலயம் ஆகிய இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். குமாரசாமிபுரம் பாடசாலை முற்றாக இடிந்து வீழ்ந்துள்ளது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான விவரங்களைக் கண்டாவளை உதவி அரச அதிபர் பணிமனை திரட்டி வருகின்றது.

பேராறு, பண்டாரவன்னி, காஞ்சுரமோட்டை ஆகிய பகுதிகளில் புனர்நிர்மாணப் பணிகளுக்காக முல்லை. அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தால் வழங்கப்பட்ட 7 லட்சம் ரூபா பெறுமதியான கட்டட நிர்மாணப் பொருள்களும் வெள்ளத்தினால் அடித்துச்செல்லப்பட்டன.

முத்தையன்கட்டுக் குளத்தின் நீர்மட்டம் 20 அடிக்குமேல் உயர்ந்ததனால் அதன் அபாயக்கதவுகள் திறந்துவிடப்பட்டன. இதனால், பேராறு கரையோரப் பகுதிகளிலுள்ள மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு வீதியும் வெள்ளத்தால் போக்குவரத்திற்கு தடைப்பட்டுள்ளது. முல்லை. அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், பொருண்மிய மதியுரையகம் அரசியல்துறை ஆகியன மக்களின் போக்குவரத்துக்கான பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

வெள்ளாங்குளம் - முழங்காவில், கிராஞ்சி - வேரவில், ஜெயபுரம் - வன்னேரி போன்ற வீதிகளுக்கான பஸ் சேவைகள் நேற்றுமுன்தினம் நண்பகலுடன் தடைப்பட்டிருந்தன.

முழங்காவில், ஜெயபுரம் பகுதிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கிறது. கரியாலைநாகபடுவான், கிராஞ்சி, பொன்னாவெளி, வேரவில் போன்ற பகுதிகளும் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன.

பள்ளிக்குடா, செட்டியார்தரவெளி கிராமம் வெள்ளத்தில் முற்றாக மூழ்கியது.

இந்தக் கிராமத்தில் தற்காலிகமாகக் குடியமர்ந்துள்ள 150இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையில் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியுள்ளன.

இக்கிராமத்திலுள்ள குடிதண்ணீர் கிணறுகள் அனைத்தும் வெள்ளத்தினுள் மூழ்கியுள்ளன.

இதனால், மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஒருமாத காலத்திற்கு இக்கிராம மக்கள் தமது இருப்பிடங்களுக்குச் செல்லமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

(த-12-291-352-341-405-323-415-403-353-355)

| குளங்கள் | குளத்தின் கொள்ளளவு | தற்போதைய நீர்மட்டம் |
|---|---|---|
| இரணைமடு | 34' | 34' 2'' |
| கனகாம்பிகைக் குளம் | 10' | 10' 5'' |
| புதுமுறிப்புக் குளம் | 16' 6'' | 17' 5'' |
| அக்கராயன் குளம் | 23' 2'' | 25' 8'' |
| பிரமந்தல் ஆறுக்குளம் | 12' | 15'' |

இரணைமடுக் குளத்தின் ஆக்ரோஷம்...


படங்கள்: தி. சிவருபன் (வட்டக்கச்சி செய்தியாளர்)








தாக்குப் பிடிக்க முடியாத கனரக வாகனங்கள்...





இப்படி ஒரு டிரக்டர் பயணம்...

புலிகளின் குரல் வானொலி நடத்திய

## கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்குப் பரிசளிப்பு

கிளிநொச்சி,நவ.23

புலிகளின் குரல் வானோசை - 15 கலை இலக்கியப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் புலிகளின் குரல் அமலன் அரங்கில் நடைபெற்றது.

புலிகளின் குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்றினார். ஈகச்சுடரை துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் ஏற்றினார். மாவீரர் நினைவுக் கல்லறைக்கு சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா மலர்மாலை அணிவித்தார்.

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் கையெழுத்திட்டு வழங்கிய சான்றிதழ்களைத் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர், தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே. இளங்குமரன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம், மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா ஆகியோர் வழங்கினர். (த-202)

கிளிநொச்சி

வன்னிச் செய்திகள்

முல்

## அரிசிஆலை உரிமையாளர்களுக்கு சுகாதார சேவையினர் அறிவுறுத்து

கிளிநொச்,நவ.23

பருவமழை ஆரம்பித்திருப்பதை அடுத்து தமிழீழ சுகாதார சேவையினர் அரிசி, நெல் குற்றும் ஆலை உரிமையாளர்களுக்கு சில அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளனர்.

குறிப்பிட்ட அறிவுறுத்தல்கள் வருமாறு:-

* நெல் ஊறவைக்கும் தொட்டியினுள் மூன்று நாள்களுக்கு மேல் நீர் தேங்காதவாறு பேணப்படவேண்டும்.

* நெல் ஊறவிடும் தொட்டி கழிவுநீர் திறந்த இடங்கள், திறந்த குழியில் விடாது மூடிய நீர் உறிஞ்சக் கூடிய குழிகளில் விடப்படுதல் வேண்டும். இக் கழிவுகளில் நுளம்பு, இலையான் பெருகாது அவதானிக்க வேண்டும்.

* அரிசி, நெல் குற்றும் ஆலையச் சுற்றாடலில் நீர் தேங்கி நுளம்பு பெருகக் கூடிய ரின்கள், கோப்பைகள், ரயர்கள், பிளாஸ்ரிக் வாளிகள், உடைந்த உடையாத பாத்திரங்கள் போதத்தல்கள் அகற்றப்படவேண்டும்.

* உமிக்கழிவுகள், காற்றுடன் வெளியுடன் தொடர்புபடாத வகையில் அகற்றப்பட வேண்டும் நிலையச் சூழலில் வைத்து எரிப்பதை தவிர்க்கப்படவேண்டும். (த)

## முடிவில்லா வாழ்வில்
# மூன்றாண்டு நிறைவு



### அமரர் செ.பேணாட் இராஜேந்திரம்

பாசத்தின் இருப்பிடமாய்
அன்பின் திருவுருவாய் வாழ்ந்தீர்
இறைவனில் இளைப்பாறிட
இறைஞ்சுகின்றோம் தினமும் நாம்

2 ஆம் கட்டை, இராஜ வீதி,
கோப்பாய் மத்தி. (43017)(11-17)

இ.பேணடேற் *(மனைவி)*,
இ.ஜோய்திலக்குமார் *(மகன்)*.


# 'நியாப்' உதவியுடன் பயிற்சிக் கூடம்

அச்சுவேலி,நவ.23

கோப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கால்நடை வளர்ப்போர் பண்ணையாளருக்கு பயிற்சி வழங்குவதற்கான பயிற்சிக்கூடம் ''நியாப்'' நிறுவனத்தின் நிதி உதவியுடன் நிறுவப்படுகின்றது.

புதிதாக நிறுவப்பட்ட கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பயிற்சி வகுப்புகள், செயலமர்வுகள் நடத்துவதற்கான வசதி இல்லாமல் இருந்து வந்தது.

''நியாப்'' நிறுவனத்தின் நிதி உதவியுடன் 7 லட்சம் ரூபா செலவில் 33 அடி நீளம் 21 அடி அகலம் உடைய 50 பேருக்கான இருக்கை வசதி கொண்ட பண்ணையாளர் பயிற்சிக் கூடம் நிறுவப்பட்டு வருகின்றது.

(த-11)


## பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 80 ஆவது அவதார தின கொண்டாட்டம்

இடம் : 190, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம் ''சாயி பாத மந்திர்'' மண்டபம்
காலம் : 23-11-2005 புதன்கிழமை பிற்பகல் 3 மணி
விசேட சொற்பொழிவு : கலாநிதி சபா.ஜெயராசா
யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர்
விடயம்: பகவான் சத்திய சாயிபாபாவின் அவதாரமகிமை

திருவூஞ்சல் நடைபெறும். அன்பர்கள், பக்தர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(சி/46315)(26-32-11-15) நிலைய அங்கத்தவர்கள்.



## நீங்கிடுமோ.... நினைவலைகள்

5ஆவது ஆண்டு

மண்மகிழ
11.11.1949
கண்நெகிழ
17.11.2000



அமரர்
சி.செல்வரத்தினம்
(முன்னாள் ஆசிரியர், கற்குழி-சாவகச்சேரி)

10ஆவது ஆண்டு

மண்மகிழ
13.06.1914
கண்நெகிழ
15.12.1995



அமரர்
சிதம்பரப்பிள்ளை கனகம்மா

நெஞ்சத்து.......நினைவலைகள்.....நீங்கிடவும் கூடுமோ....
கொஞ்சிக்.....குலவிய.....குதூகலமும் மறைந்திடுமோ.....
கெஞ்சினால்......வருவீரோ......உலகியல் நியதியதுவோ.....
விஞ்சிடும்......மனங்களிங்கே......விம்முவதும்....கேட்டிடுமோ...
வஞ்சகன் கூற்றுவனும்.... வகுத்த விதிதான் மாறிடுமோ.....
தஞ்சமடைந்தீரோ....நஞ்சுண்ட கண்டன் தாளதுமோ.....
நெஞ்சார வணங்குகின்றோம்...வீடுபேறும் அடைந்திடவே....

20A, கடற்கரை வீதி,
ஈச்சமோட்டை,யாழ். [43037] [38-32-15-11]

மனைவி, பிள்ளைகள்,
மைத்துனன் குடும்பம்.



ලංකා බැංකුව இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை வங்கி
## பகிரங்க ஏலவிற்பனை பற்றிய அறிவித்தல்

இலங்கை வங்கியின் பின்வரும் கிளைகளில் 30.11.2004 ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு, இதுவரை மீட்கப்படாத நகைகள் யாவும் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ்ப்பாணம் மேற்தரக் கிளையில் மார்கழி மாதம் 10 ஆம், 11 ஆம் திகதிகளில் காலை 9 மணிமுதல் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என அறியத்தருகின்றோம்.

- யாழ்ப்பாணம் மேற்தரக்கிளை
- யாழ்.இரண்டாம் கிளை (ஸ்ரான்லி வீதி)
- பருத்தித்துறை
- மானிப்பாய்
- சுன்னாகம்
- திருநெல்வேலி

**இந்த நகைகள் மீட்கப்படவேண்டிய கடைசித் திகதி 09.12.2005**

அறிவித்தலின்றி ஏலவிற்பனைத் திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

23.11.2005.
(சி/46320)(32-11-15)

உதவிப் பொதுமுகாமையாளர்
(வடபிராந்தியம் - யாழ்ப்பாணம்).



## United Nations Development Programme

The UNDP Mine Action Project, a Project of UN Support to Mine Action in Sri Lanka, has the following vacancies:

The Post of Driver to be based in Jaffna.

**UNITED NATIONS DEVELOPMENT PROGRAMME**
**Position of Driver , JAFFNA.**

| The duties and responsibilities of the Driver, Jaffna are as follows: | Educational Background: |
|---|---|
| The Driver will be responsible to the Jaffna District Mine Action Officer. Specific duties will be:<br>• to support the DMAO Operations, Quality Assurance and Administration requirements in Jaffna;<br>• to drive office vehicles for the transport of authorised personnel, for official meetings, field trips and to deliver various items to other locations;<br>• be responsible for the day to day maintenance of the assigned vehicles;<br>• perform minor vehicle repairs and arrange for routine services and other major repairs;<br>• keep a daily log of official trips, mileage, fuel consumption, oil changes etc;<br>• follow official guidelines in the event of an accident;<br>• follow official UN security guidelines;<br>• use the HF and VHF radios in accordance with UN guidelines;<br>• other duties as required by either the Mine Action Officer, Administration Officer or the Technical Advisor. | **Experience:**<br>• hold a valid Sri Lankan driving license;<br>• good knowledge of Sri Lankan geography;<br>• good knowledge of Sri Lankan road rules and regulations;<br>• be able to operate a VHF and HF radio;<br>• at least 2 years experience as a professional driver;<br>• be able to work in a multi national environment;<br>• have good command of verbal and written English, Tamil and Sinhala. ;<br>**Others:**<br>• Fluent in both written and spoken Tamil and English. Knowledge in Sinhala language is an advantage.<br>• Willing to travel for training if required;<br>• Possess good work habits with a willingness to work in a multi-cultural environment;<br>• Flexible and adaptable to any situation;<br>• Be in good health.<br>**Duration:** Initially for one year with probable extensions.<br>**Duty Station:** Jaffna. |

Qualified candidates are invited to send an updated CV containing details of educational and professional qualifications and work experience with the names of two, non-related referees and a contact telephone number during working hours, on or before 4pm on the 30th November 2005. The position offers an attractive remuneration package. Applications should be addressed to the Technical Advisor, UNDP Mine Action Project, District Secretariat, Jaffna.
N.B. Only short-listed candidates will be notified.


# சாரமரம் முறிந்து தொழிலாளி காயம்

தென்மராட்சி,நவ.23

சாரமரம் முறிந்து தூக்கி வீசப்பட்டு கட்டடத் தொழிலாளி காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த 19ஆம் திகதி பளை வண்ணான்கேணியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சிவன் தயாரூபன் (வயது 31) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(த-117)

# விபத்தில் காயம்

தென்மராட்சி,நவ.23

மழை பெய்துகொண்டிருந்த வேளையில் வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்தவர் தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த 19ஆம் திகதி மீசாலையில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த மா.சிவானந்தன் (வயது 27) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

(த-117)

# 25 வருடங்களாக திருத்தப்படாத வீதி

அச்சுவேலி,நவ.23

அச்சுவேலி 10ஆம், 11ஆம் வட்டாரங்களின் எல்லை ஒழுங்கையான பயிற்றோலை வீதி 25 வருடங்களுக்கு மேல் எந்தவிதமான பராமரிப்பும் திருத்த வேலையும் செய்யாமல் பாரிய குழிகளுடன் காணப்படுகிறது. இது குறித்துப் பொது ஸ்தாபனங்கள் வலி-கிழக்கு பிரதேச சபையிடம் முறையீடு செய்துள்ளன.

மாணவர்கள் உட்பட பெருமளவில் வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தும் இந்த வீதியில் மழைநீர் நீண்ட நாள்களுக்குத் தேங்கி நிற்பதால் வீதியைப் பயன்படுத்தும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். (த-11)

# உணவு, நீர் மூலம் விரைவில் நோய் பரவும்; மக்கள் பங்களிப்பு இருப்பின் தடுப்பது இலகு!

**நோய்** பரம்பல் நிலையின் போக்கைப் பொதுவாக கால ஓட்டத்துடன் ஒப்பிட்டுப்பார்த்தால் தொற்றுநோய்களின் பரம்பல் நிலை குறைவடைந்து தொற்றாநோய்களின் ஆதிக்கம் அதிகரித்து வருவதைக் காணலாம். உயர் குருதி அமுக்கம், சலரோகம், புற்றுநோய்கள் போன்ற தொற்றாநோய்களின் பரம்பல் மக்களிடையே அதிகரித்து வருகின்றன. எனவே, தடுக்கக்கூடிய தொற்றுநோய்களை இயன்றளவில் தடுத்து சுகாதார சேவையின் வளங்களைத் தொற்றாநோய்களைக் கட்டுப்படுத்த திசைதிருப்ப வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை தொற்றுநோய்களில் உணவு, நீர் மூலம் பரவும் நோய்கள் (வயிற்றோட்டம், வயிற்றுளைவு, நெருப்புக்காய்ச்சல், செங்கன்மாரி), காசநோய், விலங்கு விசர்நோய் (நீர்வெறுப்புநோய்) ஆகியவை இன்னமும் பாரிய பொதுச் சுகாதாரப் பிரச்சினையாக விளங்குகின்றன. குறிப்பாக உணவு, நீர் மூலம் பரவும் நோய்களின் பரம்பல்நிலை நீண்டகாலமாக அதிகரித்துக் காணப்படுவதுடன் சுகாதார சேவைகளும் சவாலாக விளங்குகின்றன.

நெருப்புக்காய்ச்சலைப் பொறுத்தவரை இலங்கையிலேயே நோய் பரம்பல் நிலையில் அதிகூடிய மாவட்டமாக யாழ். மாவட்டம் விளங்குகின்றது. மத்திய சுகாதார அமைச்சின் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவின் 2004ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டு அறிக்கையின் படி அக்காலாண்டில் இலங்கை முழுவதும் 777 நோயாளர்கள் நெருப்புக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இவர்களில் 207 பேர் யாழ். மாவட்டத்திலிருந்து இனம் காணப்பட்டவர்கள். கடந்த ஆண்டின் இறுதிக் காலாண்டில் இலங்கையின் மொத்த நெருப்புக்காய்ச்சல் நோயாளர்களில் 27 சதவீதமானோர் யாழ். மாவட்டத்தில் இனம் காணப்பட்டவர்கள் என்பது இங்கு கவனிக்கப்படவேண்டியது.

யாழ். மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் தரவுகளின் பிரகாரம் 2004 ஆம் ஆண்டில் வயிற்றோட்டம், வயிற்றுளைவு நோய்களால் 2ஆயிரத்து 250 பேரும், நெருப்புக்காய்ச்சலால் ஆயிரத்து 343 பேரும் செங்கன்மாரியால் 177 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக அறியத்தரப்பட்டுள்ளது.

உண்மையில் அரச வைத்தியசாலை விடுதிகளில் தங்கிச் சிகிச்சைபெற்ற நோயாளர்களின் தொகையே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. அரச வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவுகளிலும் தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்ற நெருப்புக்காய்ச்சல் நோயாளர்களின் தொகை இதில் உள்ளடக்கப்படவில்லை. அவர்களையும் சேர்த்தால் யாழ். மாவட்டத்தில் நெருப்புக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வருடாந்தம் பல்லாயிரமாக இருக்கும். இதே காலாண்டில் யாழ். மாவட்டத்தில் 76 பேர் வயிற்றுளைவு நோயாலும் 14 பேர் செங்கன்மாரியாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் உணவு, நீர் மூலம் பரவும் நோய்களின் உயர் பரம்பல் நிலைக்கான காரணங்களை ஆராயலாம். குடிதண்ணீருக்காகப் பயன்படும் பெரும்பாலான நீர்நிலைகள் கிருமிகளால் மாசுபட்டதாகவே காணப்படுகின்றன. பெரும்பாலான மக்கள் அருந்தும் நீர் பாதுகாப்பானதா என்பது கேள்விக்குறியே. இதனை உறுதிப்படுத்த பொதுமக்கள் கொதித்து ஆறிய நீரையே பருகவேண்டும். பல்வேறு காரணங்களாலும் இந்தச் சுகாதாரப் பழக்கம் மக்களிடையே குறைவாகவே காணப்படுகின்றது.

எனவே, இந்நோய்களைத் தடுக்கும் முதற் பாதுகாப்பு நடவடிக்கையாகப் பொதுமக்கள் கொதித்து ஆறிய நீரைப் பருகும் பழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். இச்செய்தி யாழ். மாவட்டத்தின் ஒவ்வொரு குடும்பத்தையும் சென்றடையவேண்டும்.

அத்துடன், அடிப்படைச் சுகாதாரப் பழக்கமான சாப்பிட முன், மலம் கழித்தபின், சமைக்க முன் சவர்க்காரமிட்டு கை கழுவவேண்டும். இவை ஒவ்வொரு வீட்டிலும் கடைப்பிடிக்கப்படுமாயின் இந்நோய்களின் பரம்பலை நாம் பன்மடங்கு குறைக்கமுடியும்.

பெரும்பாலான குடிதண்ணீர் மூலங்கள் மலக்கழிவுடன் வெளியேறும் கிருமிகளாலேயே மாசடைகின்றன. இதனைத் தடுக்க மலகூடங்கள் அமைக்கப்படும்போது நீர் மூலங்களிலிருந்து போதியளவு பாதுகாப்பான தூரத்திற்கப்பாலேயே அமைக்கப்படவேண்டும். அதற்கு அப்பகுதிக்கான பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் ஆலோசனையும் அனுமதியும் பெறப்படவேண்டும்.

யாழ். மாவட்டத்தில் இன்னமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான மலசலகூடங்களின்றி, குடிதண்ணீர் வசதியின்றி வாழ்கின்றனர். இந்நோய்கள் பரவுவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம். தற்போது பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் மலசலகூடங்களும் அமைக்கப்பட்டு, குடி தண்ணீர் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுவருகின்றன.

உணவு, நீர் மூலம் பரவும் நோய்களின் உயர் பரம்பல் நிலைக்குச் சுகாதாரமற்ற முறையில் இயங்கும் உணவு கையாளும் நிலையங்கள் (உணவகங்கள், தேநீர்க்கடைகள், பேக்கரிகள், ஐஸ்கிறீம் கடைகள், உணவுத் தொழிற்சாலைகள்...) காரணமாக இருப்பதைக் கடந்த காலத் தொற்றுநோய் ஆய்வுகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

ஒரு வீட்டில் உணவு அல்லது நீர் மாசுபட்டால் இக்குடும்பத்திலுள்ள சொற்ப எண்ணிக்கையினரே பாதிக்கப்படுவர். அதேநேரம், ஓர் உணவு கையாளும் நிலையத்தில் உணவு அல்லது நீர் மாசடைந்தால் ஒரே நாளில் பலநூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்படலாம். எனவே, இந்நோய்களைக் கட்டுப்படுத்த உணவுகையாளும் நிலையங்களின் சுகாதார நிலையை உறுதிப்படுத்துவது மிக அவசியம்.

**உணவகங்களின் சுகாதாரம் மேம்பட்டால் பெரும்பாலான பிரச்சினைகள் தீர்ந்துவிடும்**

வைத்திய கலாநிதி **ஆ.கேதீஸ்வரன்**
மாகாண சுகாதார சேவைகள்,
பிரதிப் பணிப்பாளர்,
யாழ்.மாவட்டம்.

சில மாதங்களுக்கு முன் யாழ். மாவட்டத்திலுள்ள உணவகங்களை பார்வையிட்டபோது பெரும்பாலானவை சுகாதாரமற்ற முறையிலேயே காணப்பட்டன. சமைத்த உணவுகளை ஈக்கள் மொய்க்கக்கூடியபடி திறந்தநிலையில் வைக்கப்பட்டிருந்தன. உணவுகள் கண்ணாடி அலுமாரிக்குள் வைக்கப்பட்டிருந்தாலும் அதன் கதவுகள் எப்போதும் திறந்தேயிருந்தன. உணவுகள் அசுத்தமான கைகளால் கையாளப்பட்டன. பாவனைக்கான குடிதண்ணீர் பாதுகாப்பானதாக இருக்கவில்லை.

பல உணவகங்களின் முன்பாக அழகாகவும் அழுத்தமாகவும் இருக்கும். அதன் பின்புறத்தை, சமையல் கூடத்தை வாடிக்கையாளர் ஒருமுறை எட்டிப்பார்த்தால் தம் வாழ்வில் அந்த உணவகப் பக்கம் எட்டியும் பார்க்கமாட்டார். உணவு பரிமாறுபவர்களின், சமைப்பவர்களின் தனிநபர் சுகாதாரம் மோசமாக இருந்தது. அவர்களது உடலும் உடைகளும் அழுக்காக இருந்தன. கழிவுநீர் தேங்கி பின்புறம் ஈக்களும் நுளம்புகளும் பெருகின. பல உணவகங்களில் விற்பனைத் திகதி காலாவதியான உணவுப்பொருள்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தன.

யாழ். மாவட்டத்திலுள்ள உணவு கையாளும் நிலையங்களை இதே நிலையில் வைத்துக்கொண்டு இந்நோய்களை ஒருபோதும் குறைக்கமுடியாது. எனவே, இவற்றின் சுகாதார நிலையை மேம்படுத்தவேண்டுமென்ற ஓர் உறுதியான முடிவு எடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் இங்கு சுகாதாரமான உணவு நிலையங்கள் மட்டுமே இயங்கவேண்டும். ஏனையவை மூடப்படவேண்டும் என்ற நிலைப் பாட்டிற்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

இந்த மாற்றத்தை நாம் தனியே சட்டத்தின் மூலம் சாதிக்க விரும்பவில்லை. ஒவ்வொரு உணவுகையாளும் நிலையத்தின் உரிமையாளரும் யதார்த்தநிலையை உணர்ந்து தமது உணவகத்தினைச் சுகாதார நிலையை மேம்படுத்த வேண்டுமென எதிர்பார்த்தோம். இந்த மாவட்டத்தில் ஒவ்வொரு வருடமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்த நோய்களால் பாதிக்கப்படுவது நிறுத்தப்படவேண்டும். ஏராளமான மக்கள் குறிப்பாக, குழந்தைகள் ஒவ்வொரு வருடமும் இந்த நோய்களால் பலியாவது தடுக்கப்படவேண்டும். இந்த ஒரே நோக்கத்துக்காக அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டுமென எதிர்பார்த்தோம்.

அந்த அடிப்படையில் முதல் கட்டமாக உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்கள் அனைவருக்கும் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் தனித்தனியாகக் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அவற்றில் இந்த மாவட்டத்தில் இந்நோய்களின் நிலை, அவற்றுக்கான காரணங்கள், உணவகங்களின் அப் போதைய நிலை, அவை சுகாதார ரீதியாக மேம்படுத்தப்படவேண்டிய அவசியம் என்பவை பற்றி விளக்கமளிக்கப்பட்டு அவர்களது சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் பதிலளிக்கப்பட்டன. அத்துடன், அவர்களது உணவகங்களை மேம்படுத்த போதிய கால அவகாசமும் வழங்கப்பட்டது. இதன் பிரகாரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஒவ்வோர் உணவுகையாளும் நிலையத்தையும் பார்வையிட்டு அவற்றை மேம்படுத்த வேண்டிய ஆலோசனையையும் வழங்கினார்கள்.


இரண்டாவது கட்டமாக உணவுகையாளும் நிலையங்களில் பணிபுரிபவர்களுக்கு அவர்களது தனிநபர் சுகாதாரம் பற்றி பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் சிறிய குழுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. அத்துடன், உணவுகளைப் பரிமாறும்போது வெறும் கைகளால் பரிமாறாது இடுக்கிகள் பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டது. சிற்றுண்டிகள் பரிமாறும் போது பாவனையாளர்கள் கேட்கும் எண்ணிக்கையை மட்டுமே வழங்கவேண்டும். மேலதிகமாகச் சிற்றுண்டிகள் தட்டில் வைக்கப்படும்போது அது பல பாவனையாளர்களின் கைபட்டு மாசுபடுவது அவதானிக்கப்பட்டது.

மூன்றாவது கட்டமாக நாம் ஆரம்பித்து வைத்துள்ள இந்த உணவுகையாளும் நிலையங்களின் சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் நீடித்து நிலைக்கவேண்டுமாயின் பாவனையாளர் மத்தியில் இதுபற்றிய ஒரு விழிப்புணர்வு ஏற்படவேண்டும். அந்த நோக்குடனேயே இக்கட்டுரையும் வரையப்படுகின்றது.

ஏதாவது ஓர் உணவகம் சுகாதாரமற்ற முறையில் இயங்கினால், உணவகங்களில் பணிபுரிபவர்கள் சுத்தமாக இல்லாவிடில், விற்பனைத் திகதி காலாவதியான உணவுப்பொருள்கள் விற்கப்பட்டால் உடனடியாக அப்பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அல்லது சுகாதார வைத்திய அதிகாரிக்கு அல்லது மாவட்ட சுகாதாரப் பணிப்பாளருக்கு அறியத்தரலாம். சில விடயங்களை நீங்களே தட்டிக்கேட்கலாம். தற்போது பாவனையாளர்களுக்குப் பல்வேறு மட்டங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் எமது பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் ஈடுபட்டுள்ளனர். ஒவ்வொரு பாவனையாளரும் தமது சமூக கடப்பாட்டை உணர்ந்து எமக்கு ஒத்துழைத்தால் இந்நோய்களைக் கட்டுப்படுத்துவதில் எமது பணி இலகுவாகும்.

எனவே, உணவு கையாளும் நிலைய உரிமையாளர்கள், உணவகங்களில் கடமை புரிபவர்கள், பாவனையாளர்கள் அனைவரும் தமது தார்மீகக் கடமையை உணர்ந்து செயற்பட்டால் இம்மாவட்டத்தில் இந்நோய்களால் பாதிக்கப்படுகின்ற - பலியாகின்ற மக்களின் தொகையைப் பன்மடங்கு குறைக்கலாம். அதுவே எமது இறுதி இலக்கு.


## வெள்ளக் காட்சிகள் சில....


வழியின்றி மாட்டுப்பட்டு நிற்கும் நாய் ஒன்று...


நல்லூரில்...


பொம்மைவெளியில்...


நாவாந்துறையில்...





# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

## (25.11.2005) வெள்ளிக்கிழமை



**மானிடம் மறக்காது...**

மண்மேடாய் முட்காடாய் பேயுறைந்த
பெரும் கூடாய் பொலிவிழந்து நிகரிழந்த
மத்தியெனும் கோயிலை பார்புகழ
திக்கெட்டும் முரசொலிக்க எதிரிகளும்
விரல் மடித்து உன் புகழைப் பாடவைத்தாய்.
மலர்ந்த முகம் மதிநுட்பம் நிமிர்ந்த நடை
நேர் கொண்ட பார்வை பரந்த நோக்கு
தற்றுணிவு உயர்ந்த பண்பு சிறந்த சேவை
இத்தனைக்கும் இலக்கணம் நீர்
மாணவர் நலன்பேண, திறன் துலங்க
மனமின்றிக் கடிந்தீர், கண்டித்தீர்,
அழவைத்தீர், உங்கள் மரணத்தின்
பேரிழப்பால் இன்று அலறுகின்றாரவரையா.
நின்னிழப்பு எம் மனதில் நீங்காத நிழலாய்,
மாறாத வடுவாய் என்றென்றும் துலங்கி நிற்கும்
ஆசிரிய விழுமியத்தை ஆழமாய் பதியவைத்தீர்
ஆசிரியன் இவனென ஆணித்தரமாய்க் கூறவைத்தீர்
இலவசக் கல்விநம்பி இழிதொழில் செய்தோரை
நவின வழிகாணென இடித்துரைத்துத் தெளிவித்தீர்
திருந்தியோரின் விசும்பலும் வழுகியோரின் நகைப்பும்
இனிமேல் தான் தெரியவரும் உன்புகழ் உலகறியும்.
கல்விச் சமூகத்தைக் கல்வியின் விழுமியத்தை
காத்திரமாய் புரியவைக்க கடினமாய் உழைத்திருந்தீர்
கடினத்தை விரும்பாத கற்கையாளர் புறஞ்சொல்லை
காட்டமாய் எடுத்துரைத்து கற்றலினைப் புரியவைத்தீர்
நல்லதையும் கெட்டதையும் நகுபவரை நிலைப்படுத்தி
புறஞ்சொல்லும் கயவர்க்கு புனிதமாய் புரியவைத்தீர்
பல்லிச்சாத்திரங்கள் பயன்சொன்னபோதும் கல்விச்
சமூகத்தைப் பக்குவமாய் வழிநடத்தினீர்
எத்தர்களும் முதுகில் குத்திக் குழிபறித்துத் திரிந்தோர்
துணைகொண்டு கயவர்கள் உன்னுயிர் பறித்தாலும்
நீர் அழியவில்லை உம் கொள்கை தோற்கவில்லை
எம் மத்தியின் மைந்தர்கள் பெற்றோர்களின்
கல்விச் சமூகத்தின் நெஞ்சங்களில் விளைகின்றீர்
நீ சென்ற பாதையை நிமிர்ந்து நின்ற தேவையை,
சேவையை கடைப்பிடிக்க உழைப்பார்கள்
மத்தியின் வளர்ச்சியை மழுங்கடிக்காது
நீர் என்றென்றும் எம்முன் நிலைத்து
நின்று வழிகாட்டும். சிதைந்த கட்டடங்கள்
உம்மால் சிறந்து சிரிப்பதும் வரைந்த
திட்டங்களில் உள்ளகக்கட்டமைப்பும்
சிறந்த சேவையின் உன்மனச் சுவடுகளும் - நீர்
மறைந்த போதிலும் மானிடம் மறக்காது
அழுத கண்ணீர்கள் காயுமுன்னே ஆண்டவன்
பதில் தருவான் ஆழ்பவன் விதி தெரியும்.
மத்தியத்தின் புது விருட்சங்கள் உருவாகும்.
வாழையின் கொலையில் ஏழைக்கு ஒரு குலை
ஏராளம் குஞ்சுகளும் அழிப்புக்கு பதில் தரும்
காலம் கனித்துவரக் காத்திருப்போம் - ஆனாலும்
மத்தியின் முத்தே உன்னை மானிடம் மறக்காது.

**மத்தியின் மைந்தர்கள், ஆசிரியர்,
கல்விச் சமூகத்தினர், குடும்பத்தினர்.**

# அமரர் உயர்திரு. கணபதி இராசதுரை

B.Ed., B.A(Pol.Sc.),M.A.(Ed.), SLPS I

முன்னாள் அதிபர். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி –1996–2005

**சேர்ப்பு: 28.09.1947** **விடுப்பு: 12.10.2005** (விஜய தசமி)

**முன்னாள் அதிபர் : யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, அச்சுவேலி மகாவித்தியாலயம், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, தெல்லிப்பழை கட்டுவன்புலம் மகாவித்தியாலயம், முல்லைத்தீவு மகாவித்தியாலயம், கிண்ணியா மகாவித்தியாலயம், யாழ். பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர், கல்வி அமைச்சு வடமாகாண அதிபர்கள் சங்கத் தலைவர், யாழ்/அகில இலங்கை துடுப்பாட்ட, உதைபந்தாட்ட அதிபர்கள் நிர்வாக ஆலோசனைக்குழு உறுப்பினர், அரிமா கழக- தொழில் வழிகாட்டல் - யாழ். மாவட்டத் தலைவர், சங்கங்களின் தலைவர்/இணைப்பாளர், யாழ்.மாநகரசபை பொது நூல்நிலைய நிர்வாக ஆலோசனைக்குழு உறுப்பினர், அகில இலங்கைச் சமாதான நீதிவான்.**

Web: jaffnacentralrasathurai.com
jaffnacentralcollege.com

EMail: jaffnacentralrasathurai@gmail.com,
jaffnacentralrasathurai@hotmail.com,
jaffnacentralrasathurai@yahoo.com.

## நினைவோடு

தேசிய கல்விமான் அமரர் அதிபர். க. இராசதுரை அவர்களின் கல்வி, கலாசார, சமூக, பொதுப் பணிகளில் உங்களோடிணைந்த நினைவுகள் பங்களிப்புக்களை ஏடாக்கி வெளியிட மத்தியின் மைந்தர்கள், கல்விச் சமூகத்தினர், வெளிநாட்டு உள்நாட்டுப் பழைய மாணவர்கள், பிற கல்லூரிகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பிறகாரியாலயங்கள், நிறுவனங்களின் தோழர்கள், உடன் பிறவாச் சகோதரர்கள் விளைகின்றனர்.

உங்கள் நினைவாக்கங்களை அனுப்பி அமரரின் நினைவேட்டின் சிறப்புக்குப் பங்களிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம். மேலுள்ள ஈ மெயில் ஊடாகவும் அனுப்பலாம்.

அதிபர்
மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

திருமதி த. இராசதுரை
No.60, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

க.தங்கராசா,
கச்சேரி,
வவுனியா.

## நன்றி கூறுகின்றோம்

எமது தலைவரின் அழிப்பைக்கேட்டு ஓடோடி வந்து எமது துயரில் பங்கேற்று ஆறுதல் கூறி அஞ்சலி செய்து, அவரின் இறுதிக் கிரியைகளையும் இறுதி ஊர்வலத்தையும், மிகச் சிறப்பாக நடத்திய கல்விச் சமூகத்தினர் சகலருக்கும் பிரதானமாக பிரதி/ உப அதிபர்கள், ஆசிரியர்கள், மத்தியின் மைந்தர்கள், வெளிநாட்டு உள்நாட்டு பழைய மாணவர்கள், பெற்றோர்களுக்கும் கல்வித் திணைக்கள, ஏனைய திணைக்களங்களின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள், ஏனைய கல்லூரிகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகளுக்கும், பத்திரிகை, துண்டுப் பிரசுரங்கள் மூலம் கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட, மலர்வளையங்கள்வைத்த சகலருக்கும் யாழ்ப்பாண/ இலங்கைப் பத்திரிகைகள், இலங்கை/ உலக வானொலி/ தொலைக்காட்சி நிலையங்கள், உலக கண்ணீரஞ்சலி நிகழ்த்திய TBC வானொலி, இணையத் தளங்கள், ஏனைய உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்கள் போன்ற எமது துயரில் பங்கு கொண்ட சகலருக்கும் நன்றி கூறுகிறோம்.

மனைவி, மக்கள், சகோதரர், குடும்பத்தினர்.

(C/46300)(51)

# உலகில் உள்ளது ஒரே மதம் - அது அன்பெனும் மதம் அன்பை எல்லோரிடமும் பகிர்ந்து கொள்ளுங்கள்!

இப்புவியின் மாந்தர்கள் அன்பெனும் அமுதத்தைப்பருகவும் தெய்வீகத்தின் இனிமையை அவர்கள் உணர்ந்தறியவும்தான் அவதாரம் நிகழ்கின்றது. மனித இதயங்கள் எப்போதெல்லாம் அதர்மத்தாலும் அன்பின்மையாலும் வறண்டு போகிறதோ அப்போதெல்லாம் அன்பின் விதைகளை ஆழமாக ஊன்றி அன்புத் தத்துவத்தை செழித்துப்பரவச் செய்யவே இறைவன் மனிதரூபத்தில் அவதாரம் செய்கின்றார்.

மாயத்திரையகன்று மனிதகுலம் மேன்மையுற்று, இனித் துயரம் இல்லையென்று இறைத்துறையில் இனிது உயர திரைகடல் கடந்தும் நூற்றுக்கணக்கான உலக நாடுகளிலிருந்தும் கோடிக்கணக்கான மக்கள் புட்டபர்த்தியை நோக்கி விரைந்து கொண்டிருக்கின்றனர்.

ஆன்மீக சாம்ராஜ்யத்தின் அடியார்கள் கூட்டம் லட்சேப லட்சமாய் திரண்டு பர்த்தி நாதரின் திருநாளை ஆனந்தக்களிப்போடும் அருள் வேட்கையுடனும் கொண்டாடும் அன்புத் திருநாள் இன்று. (கார்த்திகை - 23)

சாதி சமய பேதமின்றி உயர்ந்தோர், தாழ்ந்தோர் உணர்வின்றி சாதாரண மனிதன் முதல் உபவேந்தர்கள், மந்திரி, பட்டதாரிகள், விஞ்ஞானிகள், மருத்துவர்கள்....... எனப் பல இன மக்கள் எதுவித அழைப்பும் இன்றி அன்பின் மகத்துவமான சக்தியால் புட்ட பர்த்தி நோக்கி விரைந்த வண்ணம் உள்ளனர். முன்பு இராமஅவதாரம், கிருஷ்ண அவதாரம் தீயவர்களை அழித்து நல்லவர்களை மட்டும் வாழ வைக்க இடம் பெற்றது. ஆனால் சாயி அவதாரம் தீயவர்கள் எல்லோரையும் நல்வழிப்படுத்தி நேர்ப்பாதையில் அழைத்துச் செல்லவே வந்துள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக கடவுள் ஒருவரேஎன்ற உண்மையின் உண்மையைத் தெளிவுபடுத்துவதன்மூலம் சாயிபாபா பூரண அவதாரம் எனப் பறை சாற்றுகிறார். 'நான் ஒரு சமயத்தின் சார்பில் வரவில்லை. ஓர் இனத்தின் சார்பில் வரவில்லை. உலகில் உள்ளது ஒரே மதம் - அது அன்பெனும் மதம். உலகில் உள்ளது ஒரே கடவுள் - அது எங்கும் நிறைந்தவர். ஓர் இந்து சமயத்தவன் - ஒரு நல்ல இந்துவாக வாழவேண்டும். ஒரு கிறிஸ்தவ சமயத்தவன்-ஒரு நல்ல கிறிஸ்தவனாக வாழ வேண்டும்.......... கடவுள் ஒருவரே! நீங்கள் அன்புடன் என்ன பெயரில் அழைத்தாலும் பதிலளிப்பார். எவரும் மதம் மாற வேண்டிய அவசியம் இல்லை' என்பதே பூரண அவதார சாயிபாபாவின் அவதாரச் செய்தி.

மேலும் கூறுகின்றார்...

நீங்கள் அனைவரும் ஒன்றே. எந்தத் தேசத்தைச் சேர்ந்தவர்களாயினும் சரி, மின் குமிழ்கள் வேறானாலும் இவற்றினுள் பாயும் மின்சாரம் ஒன்றே!

நாடுங்கள், உடல்கள், உணர்வுகள் இவை எல்லாம் வேறு வேறாயினும் 'ஆத்ம தத்துவம்' மட்டும் அனைத்திலும் ஒன்றே ஆகவே ஜாதி, மத, தேசியம் ஆகியவற்றின் பெயரால் வேறுபாடுகளைக் துறந்து ஒற்றுமையின் செய்தியை எல்லோரிடத்தும் பரவச்செய்யுங்கள்.

நாடுகள் பலவாயினும் மண் ஒன்றே! நகைகள் பலவாயினும் தங்கம் ஒன்றே! நட்சத்திரங்கள் பல வானம் ஒன்றே! பசுக்கள் பல பால் ஒன்றே! உடல்கள் பல மூச்சு ஒன்றே! அனைத்து உயிரினங்களிலும் நீங்கள் சேவை புரியும் போதுதான் ஆனந்தம் அனுபமாகிறது. இதயம் என்கிற நிலத்தில் ஒருவன் அன்பெனும் விளைச்சலை உருவாக்கினான் என்றால் அவனே உண்மையான கிறிஸ்தவன்.......... இந்து.........முஸ்லிம்........

**இன்று சாயிபாபாவின் அவதார தினம்**

அவனே உண்மையான மனிதன். அவனே குரு...... அவனே போதகன் எனப்பல சத்திய மொழிகளைக் கூறுகின்றார் பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபா.

அவதாரத்திலிருந்து அற்புதத்தைப் பிரிக்க முடியாது. அவதாரமாவது ஓர் அற்புதம். அற்புதங்கள் வாயிலாகத்தான் அவதாரத்தை அறியமுடிகின்றது. விண்வெளியில் கொட்டிக் கிடக்கும் நட்சத்திரங்களைப் போல் சாயி அற்புதங்கள் கணக்கற்றவை. இங்கே ஒரு சில அற்புதங்களை சிறுதேன் துளிகளாகப் பருகத் தருகின்றோம்.

## அற்புதங்களில் சில....

பல வருடங்களுக்கு முன்பு இந்தியாவில் நீதிபதியாகக் கடமையாற்றிய கிருஷ்ண மூர்த்தி என்பவர் தமது அனுபவத்தைக் குறிப்பிடுகின்றார். ஒரு சமயம் கோர்ட்டில் ஒரு சிக்கலான வழக்கு. வாதப் பிரதிவாதிகளில் சாட்சியங்கள், விளக்கங்கள் எல்லாம் கேட்டு முடிந்தாகிவிட்டது. ஆயினும் குழப்பம் தீரவில்லை ஏதோ ஒரு நுட்பமான விஷயம் எங்கோ மறைந்திருப்பதாக உள்ளுணர்வு கூறியது. தீர்ப்பு நாளை. பல தினங்கள் ஒத்திப்போட்டுக் கொண்டே வந்தேன்.

அன்று ஒரு முடிவுக்கு வருவதற்கு முன் மீண்டும் யோசிக்கலானேன்.இரவு உணவிற்குப் பின் மீண்டும் வழக்கின் கோப்புகளை படிக்கலானேன். வழக்கம் போல் என் மனவி அளித்த தாம்பூலத்தை அசை போட்டுக் கொண்டே அறையை ஒரு தரம் சுற்று முற்றும் பார்க்கிறேன். சுவரில் பகவான் பாபாவின் திருவுருவப்படம். மனதில் இருந்ததை அப்படியே வார்த்தைகளாக கொட்டிவிட்டேன். 'வழக்கின் முடிவுகாண வழிகாட்டுங்கள் சுவாமி' என உரக்கக்கூவினேன்.

பகவானுக்கு வேறு வேலை இல்லை. உங்க கோர்ட்டு கேஸுக்கு கூட அவரை ஏன் இழுக்கிறீர்கள். மனைவி சவால் விடுவது போல் பேசினாள். அதற்குள் 'பாபா' திருவிளையாடல் புரிந்துவிட்டார்.

## பாபாவின் படத்திலிருந்து ஒளிக்கீற்று

சுவரில் இருந்த சாயிபாபாவின் திருவுருவப் படத்திலிருந்து ஒரு ஒளிக்கீற்று வெளிப்பட்டு என்னை நோக்கி வந்தது. பயம் கலந்த



பக்தியுடன் நாற்காலியில் இருந்து எழுந்து நின்றேன். ஒளிக்கீற்று திசை மாறி மேசை மேல் வைத்திருந்த சட்டப் புத்தகங்களை நோக்கித் திரும்பியது. ஒரு புத்தகத்தில் குறிப்பிட்ட பகுதியை இருமுறை அடையாளமிட்டது. பயம், மரியாதை, பக்தி, ஈடுபாடு, அதிர்ச்சி இவை யாவும் கலந்து நிறைந்த உணர்ச்சிப் பிரவாகத்துடன் அடையாளம் காட்டப்பட்ட பகுதியை படிக்கலானேன். 'உயர்நீதிமன்றத்தில் ஆண்டில்......... இலக்கமுடைய வழக்கின் தீர்ப்பைக் காண்க' என்ற குறிப்பு இருந்தது. குறிப்பிட்ட வழக்கின் விவரங்களைப் படிக்கலானேன். விந்தையிலும் விந்தை. கோர்ட்டில் நான் விசாரணை செய்து கொண்டிருந்த வழக்கும் சட்டப் புத்தகத்தில் காணப்பட்ட வழக்கும் வாதி, பிரதிவாதி சாட்சிகள் பெயரைத் தவிர மற்றெல்லாம் ஒன்றுபட்டிருந்தது. பாபாவின் அருள் ஒன்றை மட்டும் ஜெபித்துக் கொண்டே வழக்குத் தீர்ப்பை எழுதினேன் - என்கிறார் நீதிபதி கிருஷ்ணமூர்த்தி.

இது ஒரு சாதாரண நிகழ்வு. பாபாவின் கோடிக்கணக்கான அற்புத லீலைகளை வார்த்தைகளால் சொல்லமுடியாது. உள்ளே புகுந்து சுவைக்கும் பொழுதுதான் தேனிலும் இனிய சுவையைப் பருக முடியும்.பாபா கூறுகிறார்.''நீ என்னை வணங்கத் தேவையில்லை. உன்னை அறிந்துகொள். உன் பார்வையை உள்நோக்கித் திருப்பி உன்னுள் உறையும் தெய்வீகத்தை உணர்ந்து கொள். கல்வியின்நோக்கம் ஒழுக்கமுள்ள மனிதனாக வாழ்வதே. பெற்றோரைப் பணிந்து அவர்களை மகிழ்ச்சியுடன் வைத்திரு. குருவை வணங்கு எல்லாப் பெயர்களும் ஒரே கடவுளின் திருநாமங்களே.

## கடவுள் ஒருவர்; பெயர்தான் பல

எல்லோரையும் நேசித்து உதவி செய்பவனை இறைவன் நேசிக்கிறான். இறைவனுடைய அருளைப் பெறவேண்டுமாயின் எல்லோரிடத்தும் அன்பு வை! எல்லோருக்கும் சேவைசெய். சமயத்தின் பெயரில் சண்டை செய்யாதீர்கள். அறியாமையாலும் சமய வளர்ச்சி இன்மையாலும் எமது மதம் தான் உயர்ந்தது என்று நினைக்கின்றோம். எந்த ஒரு மதத்தாலும் நோய், முதுமை, இறப்பு... இந்த மூன்றையும் தடுக்க முடியுமா? நீங்கள் நன்றாக பிரார்த்தனை செய்யுங்கள். ஜெபம் பண்ணுங்கள். ஆனால், மற்றமதங்களைப் பழிப்பதிலே உங்கள் பொழுதைக் கழித்தால்... நீங்கள் இறைவனின் அருளைப் பெறுவதற்குப் பதிலாக பாவ மூடைகள் நிறைய சுமக்க வேண்டிவரும் .நீங்கள் பெரிய கடவுள் பக்தனாகவோ, விசுவாசிக்கின்றவனாக இருந்தால் மட்டும் போதாது. மற்றைய சமயங்களை பழிப்பதையோ அவதூறு செய்வதையோ நீங்கள் வணங்கும் கடவுள் கூட மன்னிக்கமாட்டார். உங்கள் முன்னேற்றத்தையோ முகத்தில் தெரியும் பிரகாசத்தைப் பார்த்தே உங்கள் பின்னால் மற்றவர்கள் வரவேண்டும். இதைவிடுத்து பிறமதங்களைப் பழிப்பதிலே உங்கள் நேரத்தை வீணாக்காதீர்கள். கடவுள் அருள் பெற்ற மனிதனுக்குத்தான் புரியும். கடவுள் ஒருவர்.பெயர்தான் பல.சிந்தியுங்கள்! சூரியன் எல்லா மதத்தவர்களும் ஒன்று தானே! மழை ஒன்று தானே, உடலமைப்பு ஒன்று தானே! சுனாமி, சூறாவளி, பூமிநடுக்கம் ஒன்று தானே நன்றாகச் சிந்தியுங்கள்.

எல்லா மனிதர்களையும் நேசியுங்கள் - எல்லோருக்கும் உதவி செய்யுங்கள். உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாதீர்கள்.அன்பை எல்லோரிடமும் பகிர்ந்து கொள்ளுங்கள். இவை அனைத்தும் நடக்கும் பொழுது உலகில் சண்டை இல்லை. அமைதியும் ஆனந்தமும் பொங்கி வடியும்.

எனவே எல்லோரிடத்தும் அன்பு வை! எல்லோருக்கும் சேவை செய்! இதுவே சாயி பாபாவின் அன்புப் பரிசு.

ஓம் ஸ்ரீ சாயிராம்

**சேவைப் பகுதி,**
**பகவான் ஸ்ரீ சத்தியசாயி**
**சேவா நிலையம்,**
**யாழ்ப்பாணம்.**

# பொதுக்கட்டமைப்புக் குறித்து புதிய அரசின் நிலைப்பாட்டைக் கோருகிறது உயர் நீதிமன்றம்

கொழும்பு, நவ. 23

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பு தொடர்பில் புதிய அரசின் நிலைப்பாட்டை எழுத்து மூலம் தருமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமாணப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக ஜே.வி.பி. தாக்கல் செய்திருந்த மனு உயர்நீதிமன்றில் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தலைமையில் நீதியரசர்களான நிஹால் ஜயசிங்க, காமினி அமரதுங்க ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேற்படி வழக்கின் முதலாம் எதிர்மனுதாரரான நிவாரண புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்க சார்பில் மன்றில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ஆர்.கே.டபிள்யூ. குணசேகர மன்றில் கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:-

இந்த வழக்கு கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஒன்றாகும். ஆனால் இப்போது புதிய அரசு இது விடயத்தில் எப்படியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதென்று தெரியாது. எனவே, அரசாங்கத்தின் கருத்துகளை இது விடயத்தில் பெறுவதற்கு கால அவகாசம் தேவை. ஏற்கனவே இடர் முகாமைத்துவ சட்டமூலமொன்றும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்த வாதத்தை ஆராய்ந்த உயர் நீதிமன்ற நீதியரசர்கள், பொதுக்கட்டமைப்பு தொடர்பான அரசின் நிலைப்பாட்டை எழுத்து மூலம் தருமாறு உத்தரவிட்டனர்.

(ஐ-க)

# ஒருங்கிணைப்பு குழுவின் கூட்டம்

வலி.தென்மேற்கு, நவ.23

வலிதென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும், விவசாயக் குழுக் கூட்டமும் நாளை வியாழக்கிழமை முறபகல் 10.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் அரச திணைக்களங்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் சம்மேளனங்களின் பிரதிநிதிகள் உட்பட மற்றும் பலர் கலந்துகொள்வார்கள்.

(ஐ-135)



ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தும்பளை கிழக்கில் போருட் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட 18 நிரந்தர வீடுகள் கையளிக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ், இலங்கைக்கான போருட் வதிவிடப்பிரதிநிதி ரோ.கெக்கணஸ் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதை முதல் இரு படங்களிலும் - கலந்து கொண்ட பிரமுகர்களையும் பொதுமக்களையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

(படங்கள்: கரவெட்டிச் செய்தியாளர்)

# களனி பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. பட்டம் பெற்ற ஐவர் விவரம்

வலி.தெற்கு, நவ. 23

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆங்கில மொழி கற்பித்தல் துறையைச் (E.L.T.C.) சேர்ந்த ஐந்து பேர் களனிப் பல்கலைக்கழக முது கலைமாணி (எம்.ஏ) கற்கைநெறியில் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களில் சி.சிறீதரசர்மா பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளார்.

திருமதி ஸ்ரீ ரஞ்சனி ஆனந்தக்குமாரசாமி, இ.இராஜகுமாரன், க.க. கண்ணதாஸ், தி. கருணாகரன் ஆகியோரே முதுகலைமாணி கற்கைநெறியில் சித்திபெற்ற ஏனையவர்களாவர்.

கடந்த வருடமும் இதே கற்கைநெறியில் மூன்று பேர் முதுகலைமாணிப் பட்டம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-152)

# சிவதொண்டர் அம்புலன்ஸ் சேவை; இந்து மாமன்றின் ஆதரவில் குடாநாட்டில்

வலி.தெற்கு, நவ.23

அகில இலங்கை இந்து மாமன்றம் குடாநாடில் சிவதொண்டர் அம்புலன்ஸ் சேவையை ஆரம்பிக்கவுள்ளது.

இந்தச் சேவைக்காக புதிய அம்புலன்ஸ் வாகனம் ஒன்றைமேற்படி நிறுவனம் கொள்வனவு செய்துள்ளது.

37 இலட்சம் ரூபா பெறுமதியுடைய இப்புதிய அம்புலன்ஸ் வாகனம் கடந்த செப்ரெம்பர் மாதம் கொழும்பு இந்து மாமன்றத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

இதனை விரைவில் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வர ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (எ-152)


## கல்வியாண்டு 2006 ற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன



A/L தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர் கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபல பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதிலும் (Admission) உயர்கல்விக்கான வாய்ப்புக்களைப் பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான ஏனையக்களையும் உறுதிசெய்கின்றது. அதுமட்டுமல்லாது HND தகைமையைப் பெற்றுக் கொண்டவர்கள் போட்டி மிகுந்த வேலைவாய்ப்புச் சந்தையில் இலகுவில் தகுதியான வேலைகளைத் தட்டிச் செல்கின்றனர்.



கிருஷாந்தஸ் ஜுட்
சுண்டிக்குளி

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவனாகிய நான் A/L 2004 கணிதப்பிரிவில் பரீட்சைக்குத் தோற்றிப் பல்கலைக்கழக அனுமதி தவறவிடப்பட்ட நிலையில் எனது வாழ்க்கைக்கு இந்த IIS நிறுவனம் நம்பிக்கையான ஒரு வழியைக்காட்டியது. தகவல் தொழில்நுட்பக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் மாணவனாக இருப்பதையிட்டு பெருமையடைகிறேன். Edexcel Inter-national, UK நிறுவனத்தின் HND கற்கைநெறியைப் பயின்றுவரும் நான் இக் கற்கைநெறியின் அங்கீகாரம் தொடர்பாக திருப்தி யடைந்துள்ளேன். இவ்வாண்டில பட்டம் பெற்று வெளியேறிய மாணவர்களுக்கு வெளிநாட்டு உயர்கல்வி, வேலை வாய்ப்ட எனப் பல்வேறு சந்தர்ப்பங்கள் தேடி வருவதையிட்டு எனக்கும் ஓர் ஒளிமயமான எதிர்காலம் உண்டென நானும் எனது பெற்றோரும் நம்பிக்கையுடன் உள்ளோம்.

BTEC HND
World Class Qualifications
Delivered Locally....... Recognised Globally

B.Sc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1½ years )

GCE A/L
with 2 Subjects

edexcel
INTERNATIONAL
Approved Training Centre

IIS CITY CAMPUS
# 181, Navalar Road, Jaffna.
TP No. : 021 222 8060 / 021 222 2201






ELECTRONIC DIVERSITY VISA ENTRY FORM

Part One - Applicant Information

அமெரிக்கன் விசா 25% குலுக்கல்

காசுக் கட்டளை தேவையில்லை!
கொழும்பு செல்லத் தேவையில்லை!!



வருடந்தோறும் அமெரிக்க அரசினால் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு 55000 பேருக்கு வழங்கப்படும் வதிவிட விசாவுக்காக பலர் விண்ணப்பிக்கின்றனர்.

தாங்களும் தங்கள் அதிர்ஷ்டத்தை பரிசீலிக்க கார்த்திகை 30ஆம் திகதிக்கு முன் உங்கள் விண்ணப்பங்களை அனுப்ப

2"x2" கலர் படம் ஒன்றுடன்
எமது நிறுவனங்களுக்கு உடன் சமுகம் தரவும்.

தொடர்புகளுக்கு:

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 222 2027 Fax - 021 222 2993



## நினைவில் ஆண்டுகள் பத்து

மண்மகிழ் கண்நெகிழ மண்மகிழ



03 ♦ 11 ♦ 1941

23 ♦ 11 ♦ 1995



18 ♦ 08 ♦ 1983

அமரர்
கனகசபை சண்முகசுந்தரம் (சோமு)
(உரிமையாளர் - சிவன் மோட்டார் ஸ்ரோர்ஸ்)

அமரர்
சண்முகசுந்தரம் சிவரூபன் (டியூக்கோ)
(மாணவன், யா/ வைத்தீஸ்வரக் கல்லூரி)

புத்திரனைச் சோதரனைப் பாசமிகு பதியை
யுத்தம் இரையாக்கி இருளில் இருத்தியும் - நாம்
நித்தம் நீவிர் நினைவில் வாழ்ந்திங்கு
பத்து ஆண்டுகள் பஞ்சாய்ப் பறந்தன வே!

(C/38357)(52-11-34)

சிவன் மோட்டார் ஸ்ரோர்ஸ்
70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 2763
டியூக்கோ றேடர்ஸ்
இல. 209, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

-குடும்பத்தினர்.
இல.29, ஓட்டுமடம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். T.P.: 021 222 6322


# தொழில் நுட்பக்கல்லூரி உள்வாரிப்பரீட்சை

யாழ்ப்பாணம், நவ.22

யாழ். தொழில்நுட்பக்கல்லூரியின் உள்வாரிப்பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

இப்பரீட்சைக்கான நேர அட்டவணையை தொழில் நுட்பக் கல்லூரியின் விளம்பரப்பலகையில் பார்வையிடலாம். என அதிபர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் இறுதிப்பரீட்சைக்கான செய்முறைப்பரீட்சைகள் விரைவில் நடைபெற இருப்பதால் மாணவர்கள் உடனடியாக கல்லூரியுடன் தொடர்புகொள்ள வேண்டும் என்று அதிபர்கேட்டுள்ளார். (எ/12-14)

# சாரணத் தலைவர் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், நவ.23

தருசின்னம் பெற்ற சாரணர் தலைவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு கொழும்பு இசுப்பத்தான மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஒன்றுகூடல் முன்னர் பிலியந்தலை மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எனினும் தவிர்க்க முடியாத காரணத்தினால் கொழும்பு இசுப்பத்தான மகா வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-204)

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கியுள்ள இடைத்தங்கல் முகாம்கள் தற்போது தொடரும் மழையால் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி - சக்கோட்டை இடைத்தங்கல் முகாமில் நேற்று எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள்: சுந்தரலிங்கம்)

வெள்ளத்தில் மிதக்கும் குடியிருப்புகள்



வெள்ளக்காட்டில் முன்பள்ளி



ஆறாகிய வீதி....



இருப்பிடம் இழந்த மக்கள் வீதியில்...



# தமிழின அழிப்பு நெடுந்தீவிலிருந்து ஆரம்பமா? தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக்கழகம் ஆவேசம்

யாழ்ப்பாணம்,நவ.23

மீண்டும்தமிழின அழிப்பு நெடுந்தீவிலிருந்து ஆரம்பமாகின்றதா? என்று ஆவேசக் கேள்வி எழுப்பியுள்ளது தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக்கழகம். கடற்படையினர் இருவர் காணாமற்போயினர் என்று தெரிவித்து நெடுந்தீவில் படையினர் கடந்த சனிக்கிழமை இரவு முதல் நடத்தும் தேடுதல் நடவடிக்கை குறித்து வெளியிட்ட அறிக்கையிலேயே இக்கேள்வியைக் கழகம் எழுப்பியுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாவீரர் எழுச்சி நாளை அனுஷ்டிக்கும் நிகழ்வுகள் தமிழர் தாயகத்திலும் தமிழர் வாழும் உலக நாடுகள் எங்கும் இடம்பெற்று வரும் இவ்வேளையில் ஸ்ரீலங்காவின் புதிய ஜனாதிபதி பதவியேற்ற மறுநாளே ஸ்ரீலங்கா படைகள் தமது இராணுவ அராஜகத்தை நெடுந்தீவுப் பிரதேசத்தில் கட்டவிழ்த்து விட்டமையானது மீண்டும் தமிழர் தம் உரிமைக்கான ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்க வழிசெய்யும் நிகழ்வாகவே உள்ளது.

எந்த ஒரு காரணமும் இன்றி நெடுந்தீவுப் பிரதேசத்தில் ஒரு படை நடவடிக்கை போல் இராணுவத்தினர் குவிக்கப்பட்டும் மக்கள் வீடுகளை விட்டு வெளியே வராத வண்ணம் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். பல பொதுமக்கள் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டும் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டும் வருகின்றனர். தமிழ்மக்களின் எழுச்சியைப் பொறுக்கமுடியாமல் தமிழர்கள் தமது தேசிய எழுச்சி நாளான மாவீரர் நாளை அனுஷ்டிப்பதைத் தடுக்கும்நோக்குடன் மீண்டும் தமிழின அழிப்பின் ஆரம்பமாகவே இந்த நடவடிக்கைகள் நெடுந்தீவுப் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த ஸ்ரீ லங்கா ஜனாதிபதித் தேர்தலை ஒட்டுமொத்த தமிழ் மக்களும் புறக்கணித்து தமது நிலையைச் ஸ்ரீலங்காவிற்கும் சர்வதேசத்திற்கும் தெளிவாக எடுத்துக்கூறியுள்ள இந்த நிலையில் இவ்வாறான இராணுவ நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா இராணுவம் உடனடியாக நிறுத்தவேண்டும் முப்படைகளின் தளபதியாகப் பொறுப்பேற்றிருக்கும் புதிய ஜனாதிபதி உரிய நடவடிக்கைகளை உடன் விரைந்து எடுக்கவேண்டும் இல்லையேல் வரப்போகும் காலங்கள் நல்லதொரு வரலாற்றுப்பாடத்தை ஸ்ரீலங்காவுக்குப் புகட்டும். அது தமிழ் மீக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கும் சுதந்திரமான வாழ்வையும் சுதந்திர தேசத்தையும் தமிழருக்குப் பெற்றுத்தரும் - என்றுள்ளது. (ஓ)

# அச்சுவேலி தபால் நிலையத்திற்கு கட்டடம் அமைப்பது எப்போது?

## அப்பகுதிப் பொதுமக்கள் கேள்வி

அச்சுவேலி,நவ.23

அச்சுவேலி தபால் நிலையத்திற்கு நிரந்தரமான கட்டடம் கட்டுவதற்குப் பொதுமக்களின் நிதி உதவியுடன் கொள்வனவு செய்த காணியைப் பராமரிக்கவும் அதில் புதிய கட்டடம் கட்ட விரைந்து நடவடிக்கை எடுக்கவும் பொது மக்கள் கோரி வருகின்றனர்.

அச்சுவேலி தபால் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு கடந்தவருடம் 60 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், அச்சுவேலியில் கட்டடம் அமைப்பதற்குத் தபால் திணைக்களத்திற்குச் சொந்தமான காணி இல்லாமையினால் கட்டடம் கட்ட முடியாமல் இருந்தது.

திணைக்களத்திற்குச் சொந்தமான காணி இல்லாத நிலையில் கட்டடம் கட்டப்படவில்லை என்பதை அறிந்து அச்சுவேலி அஞ்சலக அபிவிருத்திக் குழுவும் பொது மக்களும் இணைந்து நிதி திரட்டி பல லட்சம் ரூபா செலவில் அச்சுவேலி - சங்கானை வீதியில் பழைய தபால் நிலையத்திற்கு அண்மையில் காணி ஒன்றைக் கொள்வனவு செய்து வழங்கினர்.

தபால் நிலையத்திற்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட காணி தபால் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டு பல மாதங்கள் ஆகிவிட்டன.

அஞ்சல் திணைக்களம் பொறுப்பேற்றுக்கொண்ட காணியை இது வரை காலமும் எல்லை போட்டுப் பராமரிக்கப்படவில்லை. புதிய கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது குறித்துப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தபால் நிலையக் கட்டடம் கட்டுவதற்கான காணி அடையாளம் தெரியாமல் பற்றைகள் மூடி புதர் மண்டிக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

(ஓ-11)

# யாழ். நகர வடிகால்களில் கழிவகற்றல் உடன் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.23

யாழ். நகரப் பகுதியில் உள்ள வடிகால்களில் கழிவுகளை உடன் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

யாழ். நகர்ப்பகுதி வாய்க்கால்களில் கழிவுகள் தேங்கியுள்ளன.

இதனால், வெள்ளநீர் ஓடமுடியாமல் தேங்குகின்றது. அத்துடன், சுகாதாரச் சீர்கேடும் ஏற்படுகிறது. எனவே, வடிகால்களில் கழிவகற்றும் பணியில் யாழ். மாநகர சபையின் வேலைப் பகுதி மராமத்துப் பகுதி, சுகாதாரப் பகுதி ஆகியவற்றைச் சேர்ந்த ஊழியர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களுக்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். மக்கள் ஒத்துழைப்புடனே இப் பணியை திறம்பட ஆற்றமுடியும் - என்றார் ஆணையாளர். (ஓ-14-12)

# வீதியைத் திருத்தக் கோரிக்கை

வளலாய்,நவ.23

வலிகாமம் கிழக்கு தம்பாலைச் சந்தியிலிருந்து இடைக்காடு வரையான வீதி கடந்த முப்பது வருடங்களுக்கும் மேலாகப் புனரமைப்பு செய்யப்படவில்லை என்று பொதுமக்கள் கூறுகின்றனர். இந்த வீதியில் போக்குவரத்து மேற்கொள்வோர் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதியைப் புனரமைக்குமாறு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையிடம் நீண்டகாலமாகக் கோரிக்கை விடுத்தும் எதுவித பயனும் இது வரை கிட்டவில்லை என்று பொதுமக்கள் தரப்பில் கூறப்படுகிறது.

மாணவர்கள், விவசாயிகள் உட்பட அதிக எண்ணிக்கையானவர்கள் இந்த வீதியைப் பயன்படுதுகின்றனர். ஆகவே, இதனை விரைவில் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அப்பகுதி சமூக அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. (ஓ)

# வலி. தென்மேற்கில் வெள்ளம்

வலி.தென்மேற்கு,நவ.23

தொடர்ந்து பெய்த பலத்த மழையினால் வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. வெள்ளம் வழிந்தோடுவதற்காக வீதிகளின் குறுக்காகப் பல இடங்களில் சிறு வடிகால்கள் வெட்டப்பட்டுள்ளன. பண்டத்தரிப்பு - பெரிய விளான் பிரதான வீதியில் வெள்ளம் வீதிக்கு மேலாகப் பாய்ந்து ஓடுகிறது. சில்லாலை, வடலியடைப்பு, மாதகல், சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளில் ஒழுங்கைகள், சிறு வீதிகள்தோறும் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் மக்களின் போக்குவரத்துக்குச் சிரமம் ஏற்பட்டுள்ளது. இப்பகுதிகளிலுள்ள குளங்களும் வீடுகளிலுள்ள கிணறுகளும் நிரம்பியுள்ளன. இதேவேளை, கடும் காற்றினால் வாழைகள் பல அடியோடு சாய்ந்துள்ளன. (ஓ-135)

# வலி. தென்மேற்குப் பிரிவில் மாவீரர் தின ஏற்பாடு மும்முரம்

வலி.தென்மேற்கு,நவ.23

வலி. தென்மேற்குப் பிரிவில் மாவீரர் எழுச்சி வாரத்தை முன்னிட்டு இப்பிரிவிலுள்ள பொது அமைப்புகளால் அலங்கார வளைவுகள் அமைத்தல், சிரமதானங்கள், மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு ஆகியனவற்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பிரதேசத்திலுள்ள வர்த்தக சங்கங்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் ஆகியன மாவீரர்தினத்தை முன்னிட்டு பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. சந்திகள், வீதிகள்தோறும் சிவப்பு - மஞ்சல் கொடிகளைக் கட்டுவதற்கு இப் பிரிவிலுள்ள வர்த்தக சங்கங்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அறியப்படுகிறது. தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த தினத்தையும் சிறப்பான முறையில் கொண்டாடுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஓ-135)

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில்

# கல், மரம், மணலை வீதியோரம் பறிப்பதற்குத் தடை விதிப்பு

யாழ்ப்பாணம்,நவ.23

வீதிகளில் கற்கள், மரங்கள் மற்றும் மணல் போன்றவற்றைப் பறிப்பதற்கும் குவித்துவைக்கவும் மானிப்பாய் வலி.தென்மேற்குப் பிரதேச சபை தடைவிதித்துள்ளது.

பிரதேச அபிவிருத்தி தொடர்பான வலி.தென்மேற்குப் பிரதேச சபையில் கடந்த 13ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

பிரதேச செயலர் மே.சாந்தசீலன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் வருமாறு:-

* வியாபார ஸ்தாபனங்கள், கைத்தொழில் உற்பத்தி நிறுவனங்கள் ஆகியவை சேகரிக்கும் கழிவுகளை, பிளாஸ்ரிக் கழிவுகள், தகரம், அஸ்பெஸ்ரஸ் கண்ணாடிக் கழிவுகள் எனத் தரம்பிரித்து. திண்மக் கழிவுகளை உப அலுவலகப் பொறுப்பதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அதற்குரிய இடங்களில் சேரிக்கவேண்டும்.
* பிரதேச சபையின் ஊடாக வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுமதியின்றி கட்டடங்கள் கட்டப்படுவது அவதானிக்கப்பட்டது. உரியவர்கள் அனுமதியின்றிக் கட்டப்பட்ட கட்டடங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்.
* பிரதான வீதிகளில் பொது வழியைத் தடைசெய்யும் வகையில் பொருள்களைப் பரப்பி விற்பனை செய்யப்படுவது தவிர்க்கப்பட்வேண்டும்.
* அனைத்து வியாபார மற்றும் கைத்தொழில் நிறுவனங்களும் வியாபார உரிமம் பெறவேண்டும். இதனைக் கண்காணிக்க கடந்த முதலாம் திகதி தொடக்கம் வருமான மேற்பார்வையாளர்கள், வருமான பரிசோதகர்கள் தங்கள் ஸ்தாபனங்களுக்கு வருகைதர மாட்டார்கள். இதனால், வியாபார உரிமம் பெற உரித்துடையவர்கள் வருட ஆரம்பத்தில் (ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதத்திற்குள்) அதனைப் பெற்றுக்கொள்ளவேண்டும் இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதேவேளை, பொதுமக்கள் பிரதேச சபைக்கான வரிகளைக் குறித்த காலத்தில் செலுத்தி ஒத்துழைப்பு வழங்கினால் வலி.தென்மேற்குப் பிரதேச சபையை நகர சபையாகத் தரமுயர்த்த முடியும் என்றும் -

பூரணவளர்ச்சி - அபிவிருத்தியை நோக்கிச் செல்ல அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என்றும் - பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.

(ஓ-204)




# சாவல்கட்டு இளைஞர் கழகத்துக்கு புதிய நிர்வாக சபை தெரிவு

வலி.தெற்கு,நவ.23

ஆனைக்கோட்டை, சாவல்கட்டு கல்வி அபிவிருத்தி இளைஞர் கழகப் பொதுக்கூட்டம் கடந்த வாரம் நடைபெற்ற போது புதிய நிர்வாக சபைதெரிவு இடம்பெற்றது.

சாவல்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு சாவல்கட்டு 'கியூடெக்' நிறுவனத்தின் இணைப்பாளர் செல்வி எஸ். டொறின் தலைமை வகித்தார்.

கல்வி அபிவிருத்தி இளைஞர் கழகத்தின் புதிய தலைவராக இரா. குணசீலன் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக க.உமாதரன், பொருளாளரர்க ச.ஜசந்தன் ஆகியோர் தெரிவாகினர். அத்துடன், எட்டுப் பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

(ஓ-152)





முதியோர் வாரத்தை முன்னிட்டு யாழ். நகர்மைய றோட்டறக்ட் கழகத்தினால் கைதடி முதியோர் இல்லத்தில் முதியோருக்கு மதியபோசனம் வழங்கப்பட்டு மாலை நேரம் கலை நிகழ்வுகளும் நடத்தப்பட்டன. இந்நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (ஓ-203)

# அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
2006 ஆம் ஆண்டுக்கான சந்தைகள், இறைச்சிக்கடைகள்,
கருவாட்டுக்கடைகள் ஆகியவற்றுக்கான
**கேள்விப்பத்திரம் வழங்கும் காலஎல்லை நீடித்தல்**

*மேற்குறிப்பிட்டவற்றுக்கான கேள்விப்படிவம் வழங்கும் கால எல்லை கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு நீடிக்கப்பட்டுள்ளது.*

*குத்தகை சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது அலுவலகத்தின் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

கேள்விப்படிவம் வழங்கப்படும் திகதி:
*2005.11.28 பி.ப.2.00 மணிவரை*

கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:
*2005.11:29 ந.ப.12.00 மணிவரை*

கேள்விபடிவம் திறக்கப்படும் திகதி:
*2005.11.29 பி.ப.2.00 மணிக்கு*

**திருமதி ச.சொக்கலிங்கம்,**
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு
பிரதேசசபை,
சுன்னாகம்.
21.11.2005

(ச.46323) (39-19-15-42)



நெஞ்சை விட்டு அகலாத
முதலாம்ஆண்டு
நினைவுகளுடன்...

அன்னையின் அரவணைப்பில்
13 – 08 – 1979
இறைவனின் அரவணைப்பில்
04 – 12 – 2004

அமரர்
**வைரமுத்து றொபின்சன்**
(றோஞ்சி)
(உரிமையாளர் சன் தையலகம்
சாவகச்சேரி)
திதி: ஸப்தமி (23.11.2005)

அண்ணா! நீ எம்மை விட்டுப் பிரிந்து பன்னிரு
மாதங்கள் ஆகிவிட்டனவே!
எம்மால் இன்னும் நம்ப முடியவில்லை அண்ணா!
உன்னைப் பெற்ற தாய் தந்தை கதறுவதை பாராயோ
அண்ணா!
உன்னை அண்ணா என்று செல்லமாக அழைத்த
தங்கை துடிப்பதைப் பாராயோ!
அண்ணா! உன்னோடு உறவாடிய நண்பர் கூட்டம்
துடிப்பதைப் பாராயோ!
அண்ணா! உன் பரந்த மனதிற்காகவா இறைவன் துடி
துடிக்கப்- பறித்துக் கொண்டான்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

என்றும் உன் நினைவுகளுடன்:
**தந்தை, தாய்,**
**தம்பி, தங்கை.**

மட்டுவில் தெற்கு.
சிவன் கோயில் வீதி.
சாவகச்சேரி.

(43001)(51-11-15)

## சாயி ஜெயந்தி

வலி.கிழக்கு,நவ.23

சுன்னாகம் ஸ்ரீ சத்திய சாயி பாபா சாயி பாதமந்திரில் இன்று பிற்பகல் 3 மணியளவில் பகவான் சத்தியசாயி பாபாவின் 80 ஆவது அவதாரதின கொண்டாட்டம் நடைபெறவுள்ளது. ஓங்கார பஜனை, திருவூஞ்சல் என்பன இடம் பெறும்.

யாழ்.பல்கலைக் கழக பேராசிரியர் கலாநிதி சபா.ஜெயராசா சாயிபாபாவின் அவதார மகிமை பற்றி உரையாற்றுவார்.

(ஓ-152)

## விநாயகர் விரதம்

நவாலி,நவ.23

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதி விநாயகர் தேவஸ்தானத்தில் விநாயகர்விரதப் பெருவிழா கடந்த 16 ஆம் திகதியன்று ஆரம்பமாகியுள்ளது.

இதனையொட்டி தினமும் பகல் 10 மணி தொடக்கம் அபிஷேகம், பூசை, புராணப் படிப்பு, அர்ச்சனை என்பன இடம்பெற்று திருவருட் பிரசாதம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதன் இறுதி நாளான எதிர்வரும் 6 ஆம் திகதி பி.ப.2 மணிக்கு கஜமுகா சுரசங்ஹாரவிழா இடம்பெறும்.

(த-100)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



திரு.திருமதி தவப்புதல்வன் பிரியலோயினி தம்பதியரின் செல்வப்புதல்வி **லதுசா** தனது முதலாவது பிறந்தநாளை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை லண்டனில் உள்ள அன்பு அப்பா, அம்மா வவுனியாவில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, லண்டனில் வசிக்கும் றாஜிஅத்தை, யோகெஸ்மாமா, கிருசா அத்தை, யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் வசிக்கும் ராஜன் பெரியப்பா, ரகு தாத்தா, மட்டுவிலில் உள்ள பாட்டன், பூட்டி, பர அப்பப்பா, சோகரம் அப்பப்பா, சாந்தி அப்பம்மா, கொடிகாமத்தில் உள்ள குணம் அப்பப்பா, சிவாஜி அப்பப்பா, சாவகச்சேரி சற்குணம் தாத்தா, ஆவரங்கால் மலர் அத்தை, நித்தி அத்தை, அம்மம்மா, பூட்டி, அச்சுவேலி நாதன் தாத்தா, வல்வெட்டித்துறை சிவம் தாத்தா, உரும்பிராயில் உள்ள ரவி தாத்தா, லண்டனிலுள்ள ஜெயம் அப்பப்பா, குலம் அப்பப்பா, குணம் தாத்தா மற்றும் அண்ணாமார், அக்காமார் மச்சான்மார், சன் ரி.வி மாமாமார் ஆகியோர் எமது அன்புச் செல்லம் லதுசாக் குட்டியை பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.




வாழ்த்துத் தகவல்:
ராஜன் பெரியப்பா
(சன் ரி.வி.)

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



நேற்றைய உதயனின் 6ஆம் பக்கத்தில் வெளியான
**அமரர் கந்தையா அமிர்தலிங்கம்**
(ஒய்வுபெற்ற ஊழியர், யாழ்.போதனா வைத்தியசாலை)

*அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி விளம்பரத்தில் அருகில் உள்ள புகைப்படமே பிரசுரிக்கப்பட்டிருக்கவேண்டும். தவறுதலாக வேறொருவருடைய புகைப்படம் பிரசுரிக்கப்பட்டுவிட்டது. இதனால் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட மனஉளைச்சலுக்காக வருந்துகின்றோம்.*

## நாவலர் குருபூசை

யாழ்ப்பாணம்,நவ.23

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 126 ஆவது குருபூசை நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகள் நடைபெறவுள்ளன.

(ஓ-204)

## பாஷையூரில் குளங்கள் நிரம்பின!

யாழ்ப்பாணம்,நவ.23

தற்போது பெய்துவரும் அடைமழையினால் பாஷையூர் விளையாட்டு மைதானத்திற்குப் பின்னாலுள்ள குளம் மத்தியூஸ் வீதியிலுள்ள குளம் என்பவற்றில் வெள்ளம் நிரம்பியுள்ளது. குளங்களை மேவி வெள்ளம் ஓடுவதால் இப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

இந்தக் குளங்களில் தேங்கியுள்ள மழைநீர் கடலுக்கு வழிந்தோடுவதற்காக அமைக்கப்பட்ட வடிகால்கள் துப்பரவு செய்யப்படாததாலேயே குளங்களில் வெள்ளம் நிரம்பி மக்கள் குடியிருப்புகளுள் புகுந்துள்ளது.

தொடர்ந்து அடைமழை பெய்வதால் இந்தக் குளங்களை அண்டிவாழும் குடும்பங்கள் இடம்பெயரவேண்டிய நிலை ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(த-190)


# COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 15, Sirambiyadi Lane,Jaffna.
Tel:- 021-2228250, 0777-222422

யாழ்நகரில் முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

## Computer Hardware Engineering Course

**Course Condense :-**
- கணனி தொடர்பான அறிமுகம்
- Operating System - Windows XP & Dos
- Internet & E-mail
- கம்ப்யூட்டரின் பாகங்களும் அவற்றின் விளக்கங்களும்.
- Mother board, Processor, Ram தொடர்பான விரிவான விளக்கம்
- கம்ப்யூட்டரை அசெம்பிள் செய்தல்
- அசெம்பிளிங் முடிந்தவுடன் என்ன செய்வது என்பது தொடர்பான விளக்கம்.(BIOS Setup)
- Hard Disk ஐ முறைப்படுத்தல்
- Software,Operating System இன்ஸ்ரோல் செய்தல்
- கம்ப்யூட்டரில் ஏற்படுகின்ற பழுதுகளை சரிபார்த்தல்.

**Hardware பயிற்சி**
- கணனிப் பாகங்களை இனம் காணும் முறை
- Assembling
- BIOS Configurations (முறைப்படுத்தல்)
- Hard Disk இனை முறைப்படுத்தல் (Partition & Formatting)
- Net work தொடர்பான அறிமுகம்.
- Tubule Shooting / Maintenance.

Free Study Pack & Driver CD

**Soft Ware பயிற்சி**
- Operating System நிறுவும் முறை (Windows 98/ Windows XP)
- Software Install செய்யும் முறை.
- Driver Installation செய்யும் முறை (Sound card, Modam , VGA, TV Card, Printer)
- Tubule Shooting .(Files Updating, Coping)

வகுப்புக்கள் ஆரம்பம்:-
28/11/2005 :- 08.30-04.00

*Course Fee :- 2000/=*
சர்வதேச தரம்வாய்ந்த சான்றிதழ்கள் வழங்கப்படும்

அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் பதிவுகளிற்கு முந்துங்கள்

கொழும்பிலிருந்து வருகைதரும் பிரபல விரிவுரையாளரால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

51




## தளராத நிலைப்பாட்டின் சின்னம் மேதகு தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள்

புலிக்கொடி பறக்க உதய சூரியனாய் மேல் எழுந்து வையகம் வாழ் தமிழினத்தை உயர்விக்கப் புயலாக எழுந்த எம் அன்புத் தலைவர் தங்கவிழா கண்டு வைரம் நோக்கிய பயணத்தில் கால் பதிக்கும் முதல் அத்தியாயம் இது.

அன்று தமிழன் என்று சொல்வதற்கு அஞ்சி அந்நியமொழி பேசித் தலைகுனிந்து வாழ்ந்த இனம் மீண்டும் தலைநிமிர்ந்து வாழ வழிசமைத்த தானைத் தலைவனின் சாணக்கியம் இன்று அகிலம் எங்கும் செறிந்திருக்கும் தமிழர் இனம் மேன்மையடைய வழிவகுக்கும் புதிய திட்டத்தின் ஆரம்பப் பயணம் இது.

அன்று புறாவின் உயிர் காப்பதற்கு தன் காலினது சதை அரிந்து தராசில் வைத்த சிபி அரசன் கதை படித்த எம் சிறார்கள், இன்று தமிழினத்தைக் காப்பதற்கு தன்னை முழுவதும் ஈந்த உன் காவியக் கதை படிக்கும் காலம் இது.

மக்களோடு இணைந்த மாண்பு காரணமாக மக்கள் மனதை வென்று தமிழினத்தின் விடிவெள்ளியாக உயர்ந்த தலைவரின் தியாகம் விலைமதிப்பற்றது. நன்றி மறவாத பண்புடைய தமிழினத்தின் நன்றியுடைமையின் வெளிப்பாடே மக்கள் அனைவரும் தலைவரை தன்பிள்ளையாகத் தத்தெடுத்து, தலைவர் பிறந்தநாளைப் பெரு விழாவாகக் கொண்டாடும் நாள் இது.

**தமிழ் மக்களின் சுபீட்சமான வாழ்வுக்கு வழிவகுத்து நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றோம்.**

**அதிபர்/பிரதி பிராந்திய பணிப்பாளர்,**

**உப அதிபர், பதிவாளர், பகுதித் தலைவர், ஊழியர்சங்கம்,**

**சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கம், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள், மாணவர் மன்றத்தினர்.**

## தொழில் நுட்பக்கல்லூரி, யாழ்ப்பாணம்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
24 - 06 - 1928

மறைவு
24 - 10 - 2005



### திருமதி அன்னபூரணம் சாந்தலிங்கம்

(வேலணை கிழக்கு)

*கடந்த 24.10.2005 அன்று கொழும்பில் காலமான எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், உள் நாட்டிலும், வெளிநாட்டிலுமிருந்து தொலைபேசி மூலம் அனுதாபங் களைத் தெரிவித்தோருக்கும், சகல வழிகளிலும் உதவியும், ஒத்துழைப் பும் நல்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*அத்துடன் இன்று (23.11.2005) புதன்கிழமை எமது வேலணை இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

தகவல்:
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

"சிவநிலையம்",
மணியகாரர் வீட்டடி, வேலணை கிழக்கு. (43036)(51-16)

ஸ்ரீ சாயிராம்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
1933 - 04 - 09

உதிர்வு
2004 - 12 - 04

### திருமதி நகுலாம்பிகை பாலசிங்கம்

*திதி: 2005.11.23*

நகுலா நீ எம்முள் வாழ்வாய்!!
*அன்பினால் எம்மை ஆண்ட*
*நகுலா நீ போன தெங்கே?*
*பண்பினால் எம்மை ஈர்த்த*
*நகுலா நீ சென்ற தெங்கே?*
*உதவிகள் செய்து வாழ்ந்த*
*நகுலா நீ போன தேனோ?*
*உறவுகள் வாழ்த்தி வாழ்ந்த*
*நகுலா நீ சென்ற தேனோ?*
*உன் துணை தவிக்குதம்மா!!*
*நகுலா நீ மறந்த தேனோ?*
*ஒன்றல்ல ஆண்டு நூறும்*
*நகுலா நீ எம்முள் வாழ்வாய்!!*

9/D, போதிறுக்கு ராம வீதி,
களுபோவில, தெஹிவல.
தொ.பே.011 2726310
(சி.46316) (39-32-16-19)

**அன்புக் கணவர்,**
**பாச சகோதரர்கள்,**
**நேசஉறவுகள்.**

## ஓராண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
21.04.1982

இறைவன் அடியில்
03.12.2004



### திருமதி டயானி மஞ்சுதன்

(திதி: அபரபட்ச சப்தமி 23.11.2005)

**(சாவ. இந்துக் கல்லூரி 2002 ஆம் ஆண்டு உயிரியல் துறை மாணவி)**

*உள்ளக்குமுறலுடன் உதிரமெலாம் உன்னினைவுடன்*
*உத்தமியே ஓராண்டு ஓடி உறைந்ததம்மா*
*கார் கால மேகமெனக் குளிர்ந்த எம் கண்மணியே*
*தாரணிந்து மணமகளாய் நின்றகோலம் மறையுமுன்னே*
*தேரேறி பறந்ததெம் டயானியே விரைந்ததெங்கு?*

மீசாலை மேற்கு,
மீசாலை.

**அம்மா, அப்பா, சகோதரிகள்,**
**குடும்பத்தினர்.**

(43032)(51-11-34)

## வீடமைப்புக்குக் கடன் படிவம் விநியோகம்

தென்மராட்சி,நவ.23

தென்மராட்சி பிரதேச மக்களுக்கு அடுத்த வருடத்திற்குரிய வீடமைப்புக் கடனுக்காக விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் இவ் விண்ணப்பப் படிவங்களைத் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பிரதி புதன்கிழமை தோறும் வழங்கி வருகின்றனர்.

அடுத்த வருடம் வீடமைப்புக் கடன் 50 ஆயிரம் ரூபாவிலிருந்து 65 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-117)

## சாயிபாபாவின் அவதார தின விழா

யாழ்ப்பாணம்,நவ.23

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 80 ஆவது அவதார தினவிழா இன்று புதன் கிழமை யாழ்ப்பாணம், பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வு தொடர்ந்து மாலை 5 மணிவரை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

காலை நிகழ்வில் முற்பகல் 9.40 மணிக்கு சாயி சிறுவர் இல்ல மாணவர்களின் ''பாபாவின் அவதார மகிமை'' எனும் தலைப்பில் வில்லுப்பாட்டு முற்பகல் 10.45 மணிக்கு யாழ். மாநகர சபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானத்தின் சிறப்புச் சொற்பொழிவு என்பனவும் -

மாலை நிகழ்வில் பிற்பகல் 2.15 மணிக்கு ''மனித வாழ்க்கையைத் தீர்மானிப்பது எது'' என்ற பொருளில் சொல்லாடற்களம், பிற்பகல் 3 மணிக்கு 'தந்தை சொல் கேட்டல்' நாடகம் என்பன இடம்பெறும். (3-12)

## நவாலி வடக்கில் விவசாயிகள் சம்மேளனம்

யாழ்ப்பாணம்,நவ.23

நவாலி வடக்கு விவசாயிகளுக்கென புதிதாக சம்மேளனம் ஒன்று அமைப்பதற்கான இடத்தை வழங்கி உதவுமாறு நவாலி வடக்கு சன சமூக நிலையத் தலைவர் சி. ஆனந்தர் உடுவில் கமநல சேவைகள் நிலையப் பெரும்பாக அலுவலரைக் கேட்டுள்ளார்.

விவசாயிகளுக்கான சம்மேளனம் அமைப்பதற்கான அனுமதியை வலி. தென்மேற்குப் பிரதேச செயலர் வழங்கியுள்ள போதும் அதற்கான இடம் இல்லாமையால் இது வரையும் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

இந்த விவசாய சம்மேளனம் உருவாக்கப்படுவதன் ஊடாக நவாலி வடக்கு விவசாயிகளின் தேவைகளை நிறைவேற்றக் கூடியதாக இருக்கும்.

எனவே எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் புதிய சம்மேளனம் உருவாக்குவதற்கான இடத்தைத் தந்துதவுமாறு அவர் மேலும் கேட்டுள்ளார். (3-185-203)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நிசந்தி ஜீவானந்தம்



உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நிசந்தி ஜீவானந்தம் (நிசா) 21.11.2005 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் ஜீவானந்தனின் (கனடா) அன்பு மனைவியும் திவ்வியன், தூயோன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீகாந்தன், காலஞ்சென்ற கெங்காதேவி ஆகியோரின் அன்பு மகளும் கந்தசாமி-பராசக்தி தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் கண்மணி மற்றும் காலஞ்சென்றவர்களான தருமலிங்கம், அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஸ்ரீயாந்தி (கனடா), சுயந்தி, சிறோஷன் (கனடா) மற்றும் காலஞ்சென்ற லக்சினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெகதீஸ்வரன் (கனடா), சிவகுமார் (ஆசிரியர், பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சனிக்கிழமை 26.11.2005 அன்று கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**த.ஸ்ரீகாந்தன் (தந்தை),**
**சுயந்தி - சிவகுமார்**
**(சகோதரி).**

*மானிப்பாய் றோட்,*
*உரும்பிராய் மேற்கு.*
(43046)(32-16-19)

### தியாகராசா சபாநாயகம்

தும்பளை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் 180/20, கிராண்பாஸ், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா சபாநாயகம் 21.11.2005 திங்கட்கிழமை காலமானார்


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2005) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சாஸ்திரியார் ஒழுங்கை,*
*தும்பளை,*
*பருத்தித்துறை.*
(43059)(32-16-19)

தகவல்:
**க.முருகேசபிள்ளை.**

## மரண அறிவித்தல்



### நடராஜா வடிவேலு

புங்குடுதீவு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் புளியங்கூடலை வதிவிடமாகவும் கொண்ட நடராசா வடிவேலு அவர்கள் 20.11.2005 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் அமரர்கள் நடராசா - பராசக்தி தம்பதியரின் மூத்த மகனும் அமரர்கள் கதிரவேலு - விசாலாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் சொர்ணகாந்தியின் பாசமிகு கணவரும் யோகநாதனின் பாசமிகு தந்தையும் நிதியரசியின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னார் இராசேந்திரம், சற்குணம், செல்வமலர் காலஞ்சென்றவர்களான குணரத்தினம், செல்வரெத்தினம் ஆகியோரினதும் யோகரெத்தினம், ஜெயரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருச்செல்வம், சிவகாமசுந்தரி, தம்பிராசா, நகுலேஸ்வரி, அன்னலட்சுமி,விமலேஸ்வரி, ராஜினி, செல்வநாயகி (ஓய்வுபெற்ற அதிபர்), கமலாதேவி, தர்மராசா, சண் கதிரவேலு ஆகியோரின் அன்பு மைத்துனரும் கந்தசாமி (ஓய்வுபெற்ற அதிபர்), இரகுபதி (உதவிக் கல்விப்பணிப்பாளர்), இராசேஸ்வரி, நிர்மலாதேவி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.98, கற்குழி, வவுனியா இல்லத்தில் 24.11.2005 வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

*யோகநாதன் (மகன்),*
NO.*98, கற்குழி,*
*வவுனியா.* (சி/46327)(32-15-19)

**T.P.: 024 2221009 வவுனியா**
**14168544309 கனடா**

தகவல்:
**குடும்பத்தினர்.**

Jayoda **ஜயோதா** ජයෝදා

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6384070 முதல் 6393607 வரை சீட்டிழுப்பு இல. 187 திகதி 21-11-2005

வெற்றி எண்கள் **8 6 0 8 9 6** சுப்பர் எண் **21**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,16,59,850/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,16,59,850/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 08 | 50,000/- | 4,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 81 | 5,000/- | 4,05,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 801 | 500/- | 4,00,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 8,042 | 50/- | 4,02,100/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 79,659 | 10/- | 7,96,590/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 07 | 5,000/- | 35,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 83 | 1,000/- | 83,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 802 | 100/- | 80,200/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 7,961 | 20/- | 1,59,220/- |
| | | மொத்தம் | 37,61,610/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 43,64,210/- |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,18,83,350/-**
தொடர் இல. 7312116 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 நொவம்பர் 24 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்வித்தி

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| காலி | 6387577-2-10 |
| நுவரெலியா | 6390585-7-83 |
| கேகாலை | 6393089-8-14 |
| கொழும்பு | 6384261-3-13 |
| மாத்தளை | 6386419-5-01 |
| புத்தளம் | 6386091-7-14 |
| கம்பஹா | 6390668-0-91 |
| மாத்தறை | 6389451-3-03 |


# மரண அறிவித்தல்கள்

## சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை, திருமதி லில்லி எலிசபெத் அந்தோனிப்பிள்ளை





கரம்பன் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை அவர்கள் 20.11.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானர்.

அவரது பாசமிகு மனைவி திருமதி லில்லி எலிசபெத் அந்தோனிப்பிள்ளை அவர்கள் நேற்று (22.11.2005) செவ்வாய்க்கிழமை காலை 5 மணியளவில் காலமானார்.

அன்னார்கள் காலஞ்சென்ற பேணாட் மற்றும் திருமதி மேரி பேனடேற், அருட்சகோதரி ஆன்மாறி (A.C., அச்சுவேலி மடம்), திருமதி இன்வன்ரா (ஜேர்மனி), திருமதி நீசாமாலினி (ஜேர்மனி), கென்றிறெஜினோல்ட் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயும், தந்தையும், மற்றும் காலஞ்சென்ற ராதிகா போனாட் மற்றும் சேவியர் அருமைநாயகம், கபில்னஸ் (ஜேர்மனி), விஜயபாஸ்கரன் (ஜேர்மனி), திருமதி நியூட்டா (டென்மார்க்) ஆகியோரின் மாமனாரும் மாமியாரும் ஆவார். டிலன் (லண்டன்), சறோன், யசோன், இஜினா, ஸ்ரீபன், ஜோன், ஜோசுவா, ஸ்ரெவானி, நினுஜன், மனுஜன், விவியன், ரிச்சாட், டானியேல் ஆகியோரின் பாசமிகு பேரனும், பேர்த்தியும் ஆவார்கள்.

அன்னார்களது பூதவுடல் இன்று (23.11.2005) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டுப் பூதவுடல்கள் சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ASJP ILLAM,
Sillalai, Panadatharrppu,
Jaffna. T.P.: 0777-245948.
(43058) (30-12-45)

தகவல்:
அருட்சகோதரி ஆன்மாறி
(A.C- மகள்),
இலங்கை மாதா மடம், அச்சுவேலி.

## குழந்தையர் செல்லத்துரை

ஏழாலை வடக்கு, கட்டுவன் தெற்கைச் சேர்ந்த குழந்தையர் செல்லத்துரை அவர்கள் நேற்று (22.11.2005) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கட்டுவன் தெற்கு குழந்தையர் - வள்ளியம்மா தம்பதியரின் அன்பு மகனும், ஏழாலையைச் சேர்ந்த காசிநாதர் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நல்லம்மாவின் அருமைக்கணவரும் பார்வதிதேவி (ஏழாலை மகாவித்தியாலயம் ஆசிரியர்), சிவஞானம், புஷ்பராணி (டென்மார்க்), சிவபாதம் (ஜேர்மனி), சரஸ்வதிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேஸ்வரன், சகுந்தலாதேவி, ஜெயரூபன் (டென்மார்க்), சுமதி, சிவநேசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கோகில கீர்த்தன், துவாரகன், மனோஜ் (டென்மார்க்), சயன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.11.2005) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது ஏழாலை இல்லத்தில் (கெற்றப்போல் சந்தி) நடைபெற்றுப் பூதவுடல் ஏழாலை மேற்கிலுள்ள ஆலங்கட்டை, குடும்ப மயானத்தில் தகனஞ்செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்

*ஏழாலை வடக்கு,*
*ஏழாலை.*
(43061) (30-12-45)

தகவல்:
செ.சிவஞானம் (மகன்).


**ராஜா** யாழ்ப்பாணம்



நாலாவது வாரம்
விக்ரம், அஸின், வடிவேல், மணிவண்ணன் நடித்த
காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30, 6.30 9.30

**நாகம்ஸ்** சுன்னாகம்
பார்த்திபன், வடிவேல், லட்சுமிராய் நடித்த
**குண்டக்க மண்டக்க**
காட்சிநேரம்: பு.நே. 11.00, 3.00, 7.00,
25 முதல் அர்ஜுன் நடித்த
**ஆணை**
(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

**மனோகரா** யாழ்ப்பாணம்



இளைய தளபதி விஜய் வெடிக்கும்
காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30
யாழ். மாவட்டத்தில்
**சிவகாசி**


## தவறிவிட்டன

இலங்கை கடவுச்சீட்டு ஒன்று, கனேடியன் கடவுச்சீட்டு இரண்டு, விமான போக்குவரத்துப் பற்றுச்சீட்டு (ரிக்கட்) போன்ற ஆவணங்கள் அடங்கிய கறுப்புநிற கைப்பை நல்லூர் பின்வீதிக்கும் கைலாய பிள்ளையார் ஆலயத்திற்கும் இடையில் 21.11.2005 திங்கட்கிழமை காலை தவறிவிட்டது. கண் டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**119A, பருத்தித்துறை வீதி, நல்லூர்.**
T.P.: 222 5528.
(43022)

## நூல் வெளியீடு

யாழ். கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ். தங்கராஜாவின் 'அரியை மாற்றிய நரியாத்தா' என்னும் சிறுவர் இலக்கிய நூல் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.(3-204)


## சாரதி தேவை

அனுபவமுள்ள ஆட்டோச் சாரதி உடன் தேவை.
சாரதி அனுமதிப்பத்திரத்துடன் நேரில் வரவும்.
ரொக் வீட்டுத்தளபாடம்,
316, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(41-46337)


## திருமதி கந்தையா தங்கரத்தினம்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வதிவிடமாகவும் கொண்ட ''சத்திவேல் கடைச்சல் தொழிற்சாலை'' உரிமையாளருமாகிய திருமதி கந்தையா தங்கரத்தினம் அவர்கள் நேற்று (22.11.2005) செவ்வாய்க்கிழமை அதிகாலை 3.30 மணிக்கு இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை கந்தையாவின் அன்பு மனைவியும் சபாநடேசன், நிர்மலானந்தன் (ஜேர்மனி), திலகவதி, சுகிர்தவதி, கலாவதி (பிரான்ஸ்), லிங்கேஸ்வரன் (சுவிஸ்), தேவகனி (பிரான்ஸ்), வரதலட்சுமி ஆகியோரின் அன்புத்தாயாரும் வேதநாயகி, மங்களேஸ்வரி, பாலச்சந்திரன், சிவானந்தராஜா, விக்னேஸ்வரன், விஜிதா, சிவகுமார், ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுஜி, அரவிந்தன், அகிலன், சாம்பவி, நித்தியா, சாகிரா, கார்த்திகன், சிந்துஜா, பிரணவன், திவ்ஜா, சத்ஜா, சரணவன், கவிஜா, கவிஷாந், கஜானன், மதுரிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் நாகேஸ்வரி, துரைசிங்கம், இரட்ணசிங்கம், தர்மகுலசிங்கம், யோகேஸ்வரி ஆகியோரின் சிறியதாயாரும், இராசரத்தினம், லீலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.11.2005) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்றுப் பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'சக்திவேலகம்',*
*வடலியடைப்பு,*
*பண்டத்தரிப்பு.*
(43063) (30-12-45)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## அப்பாப்பிள்ளை சுப்பிரமணியம்



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்று (22.11.2005) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாப்பிள்ளை-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லம்-தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் நாகம்மா (கனடா), காலஞ்சென்றவர்களான சேதிலிங்கம் (மலேசிய பென்சனியர்), சிதம்பரநாதன், சிவராமலிங்கம், பறுவதம், அம்மாப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவபாதசக்தியின் அன்பு மைத்துனரும் அரியராணி, அரியமலர், அப்பாப்பிள்ளை (சுவிஸ்), அரியசோதி, அரியசுசி (சுவிஸ்), அசோக்குமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுப்பிரமணியம் (சுவிஸ்), காலஞ்சென்ற கணேசலிங்கம், காந்தரூபி (சுவிஸ்), பரமநாதன், ஆரியவிந்தன் (சுவிஸ்), கிருஷ்ணவேணி ஆகியோரின் அன்பு மாமனாரும் லக்ஸ்ஷினி, அதீசன், பவதீசன், கீதாஞ்ஜலி, விபுலன், அஸ்வந்தி, அர்ஷாந், கஸ்தூரி, பவித்தூரி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 23.11.2005 அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3 மணியளவில் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி, தெற்கு,*
*கைதடி.*
(43053) (30-12-45)

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

## திருமதி வள்ளியம்மைப்பிள்ளை சுவாமிநாதன்



உடுவிலைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மைப்பிள்ளை சுவாமிநாதன் நேற்று (22.11.2005) செவ்வாய்கிழமை தனது 104 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு சுவாமிநாதன் (மனேஜர், ஜே.பி) அவர்களின் அன்பு மனைவியும் கனகசபை (ஓய்வுபெற்ற அதிபர்), மயில்வாகனம் (பெருந்தோட்டத் திணைக்கள, முன்னாள் லிகிதர்), சிவகாமிப்பிள்ளை, ஞானசௌந்தரி (கனடா), ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (முன்னாள் பதிவாளர்), நகுலேஸ்வரர் ஆகியோரின் சிறிய தாயாரும், பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, தெய்வேந்திர குமாரசாமி (நில அளவையாளர்), பாலசுப்பிரமணியம் (சுகாதாரப் பரிசோதகர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2005) புதன் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'முதலியார் வளவு'*
*கோப்பாய் மத்தி, கோப்பாய்.*
(43062) (30-12-45)

தகவல்:
குடும்பத்தினர்.

## 45ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்





மலர்வு
01 09 1951

உதிர்வு
11 10 2005

அமரர்
**நடராசா சிவகடாட்சம்**
(B.Sc. Dip.in. Ed) (J.P.)
*(அதிபர்,*
*யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)*

கல்லூரியிலிருந்து களைப்புடன் வருவீர்களென்று எதிர்பார்த்த விழிகள்
நீங்கள் இல்லை என்ற நிஜத்தில் கசிந்துருகின்றன
சிதைந்த உள்ளத்தோடும் வருந்துகின்ற மனத்தோடும்
வாடிநிற்கின்றோம் வருவீர்களென்ற நப்பாசையுடன்
கலையாத நினைவுகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

கடந்த 11.10.2005 சிவன் பதமடைந்த எமது குடும்பத்தலைவரின் மரணச்சடங்கு நிகழ்வுகளில் பங்குபற்றி அனைத்து உதவிகளையும் வழங்கி எமது ஆறாத்துயரில் பங்கு கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன் நாளை (24.11.2005) வியாழக்கிழமை எமது இல்லதில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கிறோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

'பிருந்தாவனம்',
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## கிளிநொச்சியில் 7ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்தன

கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் அடைமழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 17 ஆயிரத்து 691 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 6 ஆயிரத்து 691 குடும்பங்கள் இடம்பெயர்ந்துபாடசாலைகளிலும் பொதுஇடங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் அறிவித்துள்ளார்.

## இரணைமடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரணைமடுக் குளத்தின் சாதாரண கொள்ளளவு 34 அடியாகும். ஆனால், தற்போது நீர் மட்டம் 34 அடி 2 அங்குலத்துக்கு உயர்ந்திருக்கிறது.

கிளிநொச்சிக்கும் வட்டக்கச்சிக்கும் இடையிலான போக்குவரத்துகள் முற்றாகத் தடைப்பட்டிருக்கின்றன. பரந்தன் - புதுக்குடியிருப்பு வீதியில் விசுவமடுவுக்கும் புதுக்குடியிருப்புக்கும் இடையிலான பகுதியில் மறுஅறிவித்தல் வரை போக்குவரத்தை தவிர்க்குமாறு தமிழீழக் காவல்துறையினர் அறிவித்திருக்கின்றனர்.

இது ஒருபுறமிருக்க அக்கராயன் குளத்தின் வெள்ளத்தடுப்பு அணை உடைத்துவிட்டது. இதனால் இந்தக் குளம் உடைப்பெடுக்கும் அபாயநிலை ஏற்பட்டிருக்கிறது. அக்கராயன் பிரதேசத்துக்கான போக்குவரத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. மேலும் செய்திகள்,படங்கள் 5ஆம் பக்கத்தில்) (த-405)

## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி மனிதாபிமானப் பணிகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டிருக்கிறது. பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனமும் உதவிப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப்பணிகள் தொடர்பாக அரசசார்பற்றநிறுவனப் பிரதிநிதிகள், அரசியல் துறையினர் இணைந்து நேற்றுமாலை அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் கலந்துரையாடினர். (முன்னர் வந்த செய்தி 5ஆம் பக்கத்தில்) (த-353)

## நெடுந்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவில் குவிக்கப்பட்ட கடற்படையினர் பெரும் தேடுதலை வீடு வீடாக மேற்கொண்டனர்.

இத்தேடுதலில் கைதுசெய்யப்பட்ட ஏழு இளைஞர்கள் ஊர்காவற்றுறை நீதிவான் பா.சுப்பிரமணியம்முன் ஆஜர்செய்யப்பட்டனர்.

இவர்களை 5ஆயிரம் ரூபா இரு ஆள் பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

இருவர் பண்டத்தரிப்பையும் ஒருவர் வட்டுக்கோட்டையையும் நால்வர் நெடுந்தீவையும் சேர்ந்தவர்களாவர்.

இதேவேளை -

நெடுந்தீவில் நேற்று இயல்பு நிலை வழமைக்குத் திரும்பியது என்றும் -

யாழ்ப்பாணத்துக்கான படகுச் சேவை இடம்பெற்றது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (3-111)

## 25 பேர் அமைச்சரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்துறை அமைச்சராகவும், சி.பீ.ரட்னாயக்கதோட்ட வீடமைப்புஉட்கட்டமைப்புஅமைச்சராகவும் நியமிக்கப்படவுள்ளனர்.

ஏனைய அமைச்சர்களாகப் பதவி வகித்தவர்களான டி.எம்.ஜயரட்ன, மைத்திரிபால சிறிசேன, பேரியல் அஷ்ரப், நிமல் சிறிபால டி சில்வா, டியூ குணசேகர, திஸ்ஸ விதாரண போன்றவர்கள் தமது முன்னைய அமைச்சுப் பதவிகளில் இருப்பார்களெனத் தெரிகிறது.

அதேசமயம், டிலான் பெரேரா, பீலிக்ஸ் பெரேரா, மில்றோய் பெர்னாண்டோ, திஸ்ஸ கரல்லியத்த, ஜீவன் குமாரதுங்க, பவித்ரா வன்னியாராச்சி, மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகியோர் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

டி.எம்.ஜயரட்னவிற்கு என்ன அமைச்சுப் பதவியும் கூடுதலாக வழங்கலாம் என் பது பற்றிநேற்றிரவு ஆராயப்பட்டதாகத் தெரிகிறது.

இந்த அமைச்சரவையில் சமயங்களுக்கானத்தனித்தனி அமைச்சுகளை வைக்காமல் அனைத்து சமய அமைச்சுக்களையும் ஒரே குடையின் கீழ்கொண்டு வருவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதேபோல் பிரதியமைச்சுப் பொறுப்புகள் பல வற்றிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

அமைச்சரவை சத்தியப்பிரமாணத்தின் பின்னர் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதியின் தலைமையில் இன்றே நடைபெறவுள்ளது. (க)

## ரணிலுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- என்று ரணில் குறிப்பிட்டாராம்.

தற்போதுள்ள ஆரம்பப் பிரச்சினைகளை அடுத்த ஒரு வாரத்துக்குள் தாம் தீர்த்துவிடுவார் என்றும் -

அதற்குப் பின்னர் சாவகாசமாகத் தாங்கள் இருவரும் சந்தித்துப் பேசலாம் என்றும் -

ஜனாதிபதி மஹிந்த கூறியதை ரணில் ஏற்றுக்கொண்டார் என்றும் அறியவந்தது. (க)

## காலநிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெய்ய ஆரம்பித்தது.

இதனால் வெள்ளம் வடிந்தோடிய பகுதிகளில் மீண்டும் வெள்ள அபாயம் ஏற்பட்டது. வீதிகளிலும் வெள்ளம் பாய்ந்தோடியது. மக்கள் இடம்பெயரவேண்டியும் ஏற்பட்டது.

நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் இருந்து நேற்று மாலை 6 மணிவரை 101.3 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளதாகவும்-

நேற்றுப் பிற்பகல் 3 மணிமுதல் மாலை 6 மணி வரை 15.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும்-

திருநெல்வேலியில் உள்ள வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்தது. (3-12)

## எரிக் சொல்ஹெய்ம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி கொழும்புக்குவருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைத் தலைவர்களுடனும், தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் எரிக் சொல்ஹெய்ம் பேச்சுகளை நடத்தவுள்ளார்.

இதனிடையே, யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடரும் என்று புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளமைக்குப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வரவேற்பு தெரிவித்துள்ளது.

கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலவ்ஸ்டொட்டிர் இதில் கூறியுள்ளதாவது:-

புதிய அரசுத் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள மஹிந்த ராஜபக்ஷ யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடரும் என்று அறிவித்துள்ளார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள இரு தரப்பில் உள்ள ஒருதரப்பு விலகுமாறு கேட்டுக்கொண்டாலும் நாம் விலக வேண்டும்.

யுத்த நிறுத்தஒப்பந்தத்தை விலக்கிக் கொள்ள14 நாட்களுக்கு முன்பாக அறிவுறுத்தல் விடுக்கப்படவேண்டும். ஆனால், இப்போது அவ்வாறு யுத்த நிறுத்தத்தை விலக்குவதற்கான சூழல் இல்லை என நாம் நினைக்கிறோம்.

கண்காணிப்புக் குழுவினர் தமது வழமையான பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்வர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்த இரு தரப்பினரும் பேச்சுகளை நடத்த வேண்டும். கிழக்குப் பிரதேசத்தின் தற்போதைய நிலைமைகளைக் கருத்தில் கொண்டால் இந்தப் பேச்சுகள் அவசியமானவை.- என்றார் அவர். (3)

IIS இன் நம்பமுடியாத கட்டணச்சலுகை
தை 2006 பிரிவுகளுக்கு
விபரங்கள் மிக விரைவில் உங்கள் உதயனில்
IIS

## மரண அறிவித்தல்கள்

### ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை (பாலசிங்கம்)

நெடுந்தீவைச் சேர்ந்த காலஞ்சென்ற யோசப்பு ஞானப்பிரகாசம் மரியமுத்து விக்ரோறியாப்பிள்ளை ஆகியோரின் மகனாகிய அந்தோனிப்பிள்ளை (பாலசிங்கம்) அவர்கள் 21.11.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.11.2005) வியாழக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியின் பின்னர் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புனித அந்தோனியார் வீதி, பண்டத்தரிப்பு. (43068)(30-13-45)

தகவல்: அ.தவபாலன் (மகன்).

### இராசையா அரசகேசரி

அரியாலையைப் பிறப்பிடமாகவும் செல்வாநகர் கிளிநொச்சியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இராசையா அரசகேசரி (பிரதம எழுதுநர், பிறப்பு இறப்பு பதிவகம், கச்சேரி கிளிநொச்சி) அவர்கள் நேற்று (22.11.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இராசையா (ஓய்வுபெற்ற அதிபர்) சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் செல்வாநகர் கிளிநொச்சியில் வசிக்கும் கந்தசாமி - சிவமணி தம்பதியரின் அன்பு மருமகனும் இராதமணியின் அன்புக் கணவரும் கோபிராகவன் (பாண்டியன் சுவையூற்று நடுவப்பணியகம், விசுவமடு), கோகுலநாகன் (யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ 2ஆம் வருட மாணவன்), கோசலரூபிணி, ஆதவன், மாதவன், ஆர்த்திகா (கிளி/ம.வித்தியாலய மாணவர்கள்), [illegible] (ஸ்ரான்லிக் கல்லூரி மாணவி), ஆரூரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் மனோகரன் (ரஞ்சன்), கருணாகரன் (ஆசிரியர், யா/இமையாணன் அ.த.க.வித்தியாலயம்), மதிகரன் (மின் இணைப்பாளர், யாழ். பல்கலைக்கழகம்), திருமதி தேவகி பாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2005) புதன்கிழமை யாழ்ப்பாணம், அரியாலை புங்கன்குளம் சந்திக்கு அருகிலுள்ள நொத்தாரிஸ் வீதியில் அமைந்த அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் அரியாலை சிந்துப்பாத்தி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(43507)(30-13-45)

தகவல்: மதிகரன் (சகோதரன்).

## மரண அறிவித்தல்கள்

### இளையவி ஐயாத்துரை



கோண்டாவில் மேற்கு, பாரதி வீதியைப் பிறப்பிடமாகவும் தியேட்டர் வீதி இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளையவி ஐயாத்துரை அவர்கள் நேற்று (22.11.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையவி - சீதேவி தம்பதியரின் அன்பு மகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் சோதீஸ்வரன் (இந்தியா), காலஞ்சென்ற பரமேஸ்வரன், ஞானேஸ்வரன் (கனடா), வளர்மதி (ஜேர்மனி), நகுலேஸ்வரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களான கந்தர் - சிதம்பரத்தி தம்பதியரின் மருமகனும் கிட்டினன், பூமணி ஆகியோரின் சகோதரனும் லலிதாராணி, பரராஜசிங்கம் (ஜேர்மனி), ரமீலா (கனடா), லோகேஸ்மணி (இந்தியா) ஆகியோரின் மாமனாரும் அகிலன், றோசா, வத்சலா, வனோஜ், சங்கீர்த்தன் (இந்தியா), எமிலேசன் (ஜேர்மனி), எக்லிபா (ஜேர்மனி), நிசான் (கனடா), நிவேதா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2005) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தியேட்டர் வீதி, இணுவில் கிழக்கு, இணுவில். (43539)(30-45-13)

தகவல்: நகுலேஸ்வரன் (பழத்தான் - மகன்).

### திருமதி கந்தசாமி சரஸ்வதி



காரைநகர் களபூமி [illegible]யைப் பிறப்பிடமாகவும் பணகுரு ஒழுங்கை வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சரஸ்வதி அவர்கள் 21.11.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி கந்தசாமியின் அன்பு மனைவியும் கனகரத்தினம், இந்திராணி காலஞ்சென்ற தருமலிங்கம், வரதராசா, கமலாம்பிகை, காலஞ்சென்ற தனலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் தேவராசா (கிளி), மோகனாம்பாள், விக்னேஸ்வரி, விக்னேஸ்வரன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பணகுரு ஒழுங்கை, வட்டுக்கோட்டை.
T.P.: 0777 448685. (46069)(30-13-45)

தகவல்: இந்திராணி தேவராசா.

### சின்னக்குட்டி வல்லிபுரம்



ஆனந்தசாமி மடம், தொண்டைமானாறு, செல்வச்சந்நிதியைச் சொந்த இடமாகவும் நாகநாதன் வீதி, கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி வல்லிபுரம் அவர்கள் நேற்று (22.11.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2005) புதன்கிழமை அவரின் கொடிகாமம் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் 2 மணிக்கு சோனகம்புலவு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகநாதன் வீதி, கொடிகாமம். (46070)(30-45-13)

தகவல்: சிவராசா சசிகுமார் (மருமகன்), மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.